Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–06 | 21–07–2004 | புதன் கிழமை | ஓசை –154

கனேசா நகை மாளிகை

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்




இல: 123, பஜார் வீதி, வவுனியா. T.P.- 024-2222464

இல: 14, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.- 021-2225987

(சி-9943)

# போரின் விளைவு குறித்த கஜேந்திரனின் எச்சரிக்கையால் பாராளுமன்றில் அமளிதுமளி!

## கஜேந்திரனை மிரட்டும் வகையில் ஆளும்கட்சி, ஹெலஉறுமய பா.உ.கள் கூச்சல்



(கொழும்பு)

**போர் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுமானால், அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்து யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டியதினால் அங்கு பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.**

நேற்றுப் பாராளுமன்றம் கூடிய போது, தகவல்களை சுயாதீனமாக வெளியிடுவதற்கான கொள்கை வகுக்கப்பட வேண்டும் எனப் பாராளுமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களும் கொள்கை இணக்கம் வெளியிட்டனர்.

இதன்போது தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி எவரும் கதைக்காததை அடுத்து செ. கஜேந்திரன் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்தும், ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை குறித்தும் கருத்துக்களை வெளியிட்டதோடு, தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு போர் திணிக்கப்படுமானால், அதனால ஏற்படக்கூடிய பாரிய விளைவு

(12ஆம் பக்கம் பார்க்க)

## -சாய்ந்த மருதுப் பகுதியில் -
## முகமூடி அணிந்தவர்களால் இளம்பெண் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

சாய்ந்தமருதுப் பகுதியில் முகமூடி அணிந்த ஆயுததாரிகளால் இளம் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லபபட்டுள்ளார்.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் நடந்த இச்சம்பவத்தின் போது உறக்கத்தில் இருந்த அப்துல்மஜீத் நிசாயா (வயது-32) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் கல்முனை பொலிசார் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இதேவேளை இக்கொலை தனிப்பட்ட பிரச்சினை தொடர்பாகவே நடந்துள்ளதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## - படுக்க வைத்துச் சுட்டனர் -
## இனம்தெரியாதோரின் தாக்குதல் ஏறாவூரில் இருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில இரண்டுபேர் ஆயுததாரிகளின் சூட்டிற்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளனா.

நேற்று இரவு 08.30 மணியளவில் நடந்த இச்சம்பவத்தின்போது ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியைச் சேர்ந்த நியூஈஸ்ரேன் பஸ் கொம்பனி பணியாளரான பாக்கியராசா கணநாதன் வயது (35), தம்பிநாதன் தேவதாசன் ஆகிய இருவருமே சுடப்பட்டவர்களாவர்.

நேற்றிரவு இவர்களது வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாதோர் இவர்களை வீட்டிற்கு வெளியே கூட்டிவந்து குப்புறப் படுக்கவைத்து இருவரது காலிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு அங்கிருந்து சென்றுள்ளனர்.காயமடைந்த இருவரும் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## முகமாலைச் சோதனைச்சாவடியில் போராளிகள் நீண்டநேரம் தடுத்து வைப்பு

முகமாலைச் சோதனைச்சாவடி ஊடாக யாழ் குடாநாட்டினுள் வருகை தந்த விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் காரணம் எதுவும் இன்றி முகமாலை இராணுவச் சோதனைச்சாவடியில் நீண்ட நேரமாகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

மூன்று வாகனங்களில் நேற்று மதியம் குடாநாட்டிற்குச் சென்று கொண்டிருந்த போராளிகளைக் காரணம் ஏதும் தெரிவிக்கப்படாமல் இராணுவத்தினர் முகமாலைச் சோதனைச் சாவடியில் சுமார் இரண்டு மணிநேரத்திற்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டனர்.

இது தொடர்பாக போராளிகளால் படைத்தரப்பிடம் ஆட்சேபனை கடுமையாக எழுப்பப்பட்டதையடுத்து வேண்டுமென்ற ரீதியில் அவர்கள் பயணித்தவாகனங்கள் நீண்டநேரம் துருவித் துருவிச் சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. அதன் பின்னரே குடாநாட்டினுள் அப் போராளிகள் உள்நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளனர். படையினர் திட்டமிட்ட இக்கெடுபிடிகளை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறை கண்டித்துள்ளது.

(27,33)

## ஐ.நா.மனித உரிமைக்கான ஆலோசகர் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளருடன் சந்திப்பு

(அலவலக செய்தியாளர்)

இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கிளையின் மனித உரிமைகளுக்கான ஆலோசகர் மங்ரோறின், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களைசந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக்காலை9.30 மணியளவில் கிளிநொச்சி காவல்துறை நடுவப் பணியகத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது. (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.யில் ஜப்பானிய தூதரக அதிகாரியால் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு திறப்பு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் ஜப்பானிய அரச நிதியுதவியுடன் நிர்மானிக்கப்பட்ட அதிதீவிர சிகிச்சைப்பிரிவு கட்டடத்தை ஜப்பானிய தூதரக பொருளாதாரப் பிரிவு முதன்மைச் செயலாளர் டாக்டர் யுஜி மியாகாரா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு மாவட்ட வைத்திய சாலையில் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அருண் ஏற்றிவைத்தார். தொடர்ந்து முதன்மை விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர்.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை ஜப்பானிய தூதுவராலய முதன்மைப் பொறுப்பாளர் டாக்டர் யுஜி மியாகாரா திருமலை மாகாண சுகாதார சேவைகளைச் சேர்ந்த டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை மாகாண சுகாதார அமைச்சின் வடகிழக்கு மாகாண சபை செயலாளர் டாக்டர் ஆர்.எம்.எஸ் ரட்ணநாயக்க, தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அருண், முல்லை மாவட்ட பிரதி மாகாண சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜெயக்குலாராஜா உள்ளிட்டோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் பெயர்ப்பலகையை ஜப்பானிய முதன்மைச் செயலாளர் டாக்டர் யுஜி மியாகாரா அவர்கள் திரை நீக்கம் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. இதனை அடுத்து மருத்துவ விடுதி தீவிரசிகிச்சைப் பிரிவிற்கான நூலகம் என்பனவும் திறந்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உரைகளை திருகோணமலை மாகாண சுகாதார சேவைகள் பொறுப்பாளர் டாக்டர் எஸ் குமாரவேற்பிள்ளை, சுகாதார அமைச்சின் வடகிழக்கு மாகாண செயலாளர் டாக்டர் ஆர்.எம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர்-புலிகள் திருமலையில் சந்திக்க ஏற்பாடு

(திருகோணமலை)

சிறிலங்கா இராணுவத் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கூனுக்கும், விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலனுக்கும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது. “இது வழமையான கலந்துரையாடல்” என்று கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

(25)

## அம்பாறை மத்திய முகாம் பகுதியில் விகாரை மீது இனந்தெரியாதோர் குண்டுவீச்சு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் மத்திய முகாம் பிரதேசத்தில் உள்ள தடயங்களாலே விகாரை மீது இனந் தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சில் இரண்டு பெண்கள் கொல்லப்பட்டதுடன் விகாரையின் பிக்கு ஒருவா உட்பட நான்குபேர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இந்தக் கைக்குண்டு வீச்சினை மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே மேற்கொண்டதாக அம்பாறை மாவட்டப் பொலிசார் கூறியுள்ளனர்.



## வரிவிளம்பரம்

**விவசாயிகளே!**

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத் தேவையான தென்னை, மாதுளை, பலா, மா, எலுமிச்சை (தேசி), தோடை, கயூ, கமுகு, கொய்யா, கொடித்தோடை, நெல்லி, சவுக்கு, சமண்டலை, தவசி, அகத்தி, கறிவேப்பிலை, தூதுவளை, பப்பாசி (றெட்லேடி) போன்ற பலதரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள், ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (சி.9895)

**N.E.C.**

A9வீதி கிளிநொச்சி.
A/L Day class சகலபாடங்களும் 25.07.2004 ஆரம்பம் நேரம் 08.00மணி நிர்வாகம். (4832)

**குயிலன் புத்தகசாலை**

**ஆனந்தபுரம் கிளிநொச்சி.**

எமக்குரிய பிரயாணப்பை முக்கிய ஆவணங்களுடன் எமது கடைக்கும், 155ஆம் கட்டைக்குமிடையில் இரவு 7மணிக்கு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எமது கடையில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்கிறேன். (4706)


# சிறுவர் உரிமைகள் தொடர்பாக வற்றாப்பளையில் பயிற்சிப்பட்டறை

(முள்ளியவளை)

யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முள்ளியவளைப் பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் சிறுவர் உரிமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வானது கடந்த வாரம் இரு நாட்களாக வற்றாப்பளை மகாவித்தியாலய மண்டபத்தில் முள்ளியவளை பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் செல்வி. சோ.கலாமலர் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி பயிற்சிப்பட்டறையில் சிறுவர் நலன் மற்றும் உரிமைகள் தொடர்பான கருத்துக்களை பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன திட்ட இணைப்பாளர் சுகந்தா, மாவட்ட இணைப்பாளர் நிறஞ்சனா, வற்றாப்பளை. வலய அரசியல் பொறுப்பாளர் எழில்பருதி, வற்றாப்பளை கிராம அலுவலர் கணபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

மேற்படி பட்டறைக்கான சிறுவர் உரிமை பற்றிய பயிற்சியினை சுந்தரலிங்கம் ஆசிரியர் அவர்கள் வழங்கினார்.

இந் நிகழ்வில் மாதர் சங்கத்தினர் பொது அமைப்பு சார்ந்தோர், அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் பொதுமக்களென பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

### - பரந்தன் குமரபுரம் பகுதியில் -

# இரு நெல் களஞ்சியங்களுக்கு அடிக்கல் நாட்டும் வைபவம்

பரந்தன் குமபுரம் பகுதியில் உலகஸ்தாபன நிதியுதவியுடனும், கிளி மாட்ட அரச அதிபரின் நிதியுதவியுடனும், இரண்டு நெல் களஞ்சியங்களிற்கான அடிக்கல் நாட்டும் விழா கடந்த திங்கள் பிற் பகல் 1.30 மணியளவில் விவசாய சம்மேளனத் தலைவர் மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கினை கண்டாவளை பிரதேச செயலர் அவர்களும், உலக தரிசன இணைப்பாளர் அவர்களும் ஏற்றி வைத்தார்கள். தொடர்ந்து தேசியக்கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் வி.அருள் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து உலக தரிசன நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள நெற் களஞ்சியத்திற்கான அடிக்கல்லினை கிளி. மாவட்ட அரசஅதிபர் அவர்களும், கிளி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் அவர்களும், கண்டாவளை பிரதேச செயலர் அவர்களும், உலக தரிசன நிறுவன இணைப்பாளர் அவர்களும் நாட்டி வைத்தார்கள்.


அரச அதிபரின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள நெற் களஞ்சியத்திற்கான அடிக்கல்லினை கிளி. மாவட்ட அரச அதிபர் அவர்களும், கண்டாவளை பிரதேசசெயலர் அவர்களும், குமாரபுரக் கமக்காரர் அமைப்புத் தலைவர் அவர்களும், நாட்டி வைத்தார்கள்.

## அபிசேக விழா

(அலுவலக செய்தியாளர்)

புளியங்குளம் முத்துமாரி நகர் முத்துமாரியம்மன் திருக்கோவில் 27 ஆம் வருட அபிஷேகவிழா இன்று மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி, பகல் 12.00 மணிக்கு தீபாராதனைகள் விஷேட பூஜைகள் நடைபெறும். அத்துடன் மகேஸ்வர பூஜை (அன்னதானமும்) நடைபெறும். (கு)



கிளிநொச்சி இல:42 உதயநகர் கிழக்கைச் சேர்ந்த சண்முகப்பிள்ளை நல்லநாதன் என்பவருடைய வீட்டில் நான்குகால்களையுடைய கோழிக்குஞ்சொன்று பொரித்துள்ளது. கடந்த ஞாயிறு பொரித்த இக் குஞ்சு உயிருடன் உள்ளது. (படம் - கவியரசன்)

# நோயாளர் காவு வண்டிகள்

## மன்னார் வைத்தியசாலைகளுக்கு அன்பளிப்பு

நோயாளர் காவுவண்டி கையளிப்பு வைபவம் நேற்றுக்காலை 10 மணியளவில் மன்னார் சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அவர்கள் தலைமையில் இடம்பெற்றன.

இதில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் கலந்துகொண்டு அடம்பன் மாவட்ட வைத்தியசாலைக்குரிய நோயாளர் காவு வண்டியை அவ் வைத்தியசாலை பொறுப்பதிகாரி தர்மலிங்கம் அவர்களிடமும், பண்டிவிரிச்சான் மத்திய மருந்தகத்துக்குரிய நோயாளர் காவு வண்டியை மருந்தகத்தின் பொறுப்பதிகாரி செல்லத்துரை அவர்களிடமும் சம்பிரதாயு முறைப்படி வழங்கினார். இதே வேளையில் உலக தரிசன நிறுவனத்தால் நவீன வசதிகள் கொண்ட நடமாடும் பல் வைத்திய சிகிச்சை வாகனத்தை பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் வழங்கப்பட்டது. இந்த வைபவத்திற்கு மன்னார் கல்வித் திணைக்கழகத்தினர் உட்பட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

# புதிய அரிசிஆலை, முன்பள்ளி கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ் விசேட திட்டமாக அரிசி ஆலை ஒன்று உருவாக்கி அக்கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அரிசிஆலைக்குரிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 14ஆம் திகதி இடம்பெற்றது. இக்கட்டடத்திற்காக நியாப் நிறுவனம் 6 லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளது.

அத்தோடு கரைச்சிப் பிரதேச செயலகத்தால் நடாத்தப்படும் வட்டக்கச்சி தூயமணி சிறுவர் முன்பள்ளிக்குரிய புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லினை கடந்த 14ஆம் திகதி காலை7.00மணியளவில் கரைச்சிப் பிரதேச செயலர் பொன்.நித்தியானந்தம் நாட்டிவைத்தார்.

இக்கட்டடம் ரூபா 8லட்சம் பெறுமதியானது என்றும் இதற்குரிய நிதியினை கரைச்சிப் பிரதேச செயலகமே வழங்க உள்ளது என்றும் பொன்.நித்தியானந்தம் குறிப்பிட்டுள்ளார். இந்தப் புதிய கட்டடத்தினால் 50 மாணவர்கள் பயனடைய உள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.(கு)

# சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகத்தால் தெற்கிலுப்பைக்குளத்தில் சமூக செயற்பாடுகள்

(வவுனியா செய்தியாளர்)

கொழும்பில் உள்ள சமூகஅபிவிருத்தி தேசிய நிறுவகம் தனது சமூக செயற்பாட்டின் ஓரங்கமாக வவுனியாவில் உள்ள தெற்கிலுப்பைக் குளத்தில் சிரமதானப் பணியினையும், மரநடுகைத் திட்டத்தினையும் மேற்கொண்டுள்ளது.



( படம்.ஆறு.சுபாஸ்கரன்)

சமூக அபிவிருத்தி தேசிய நிறுவகத்தின் வவுனியா மாவட்ட பயிலுநர் செல்வி. ம. கிரியாவினால் ஒழுங்கமைக்கப்பட்ட சமூக செயற்பாடுகளைக் களமேற் பார்வையாளர் கேதீஸ்வரன் நெறிப்படுத்தினார். தெற்கிலுப்பைக்குள சமூக செயற்பாடுகளின் மூலம் அப்பகுதியில் உள்ள பொது இடங்கள் சிரமதானம் மூலம் சீர்செய்யப்பட்டது. இந்நிகழ்வில் நூற்றுக்கனக்கான பொதுமக்களும். சமுர்த்தி உத்தியோகத்தர் செல்வி.அ.மங்களேஸ்வரி, களப்பணிக் குழுத்தலைவர் ம.குலசேகரம், செயலாளர் திரு.பீ. ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கிராமத்தில் சமூகசெயற்பாட்டின் மற்றோர் அங்கமாகப் பயன்தரு மரங்கள் பல நாட்டப்பட்டன. (10)

## உணவற்ற பொருள் வழங்கல்

யு.என்.எச்.சி.ஆர். நிதியுதவியுடன் பாஜ் நிறுவனம் மணலாற்றுப்பகுதி மக்களுக்கான உணவற்ற பொருட்கள் கரைதுறைப் பற்றில் வழங்கப்படவுள்ளது.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய்ஆகிய கிராமங்கள் இதுவரை உணவற்ற பொருட்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் பூதன் வயல் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ள இப் பொருட்களை பெற்றுக்கொள்ளுமாறு முல்லை. மக்கள் நலன்புரிச் சங்க இணைப்பாளர் தெரிவித்தார். இப்பொருட்கள் மீண்டும் வழங்கப்படமாட்டாது எனவும் தவறாது பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.(20)

## கூட்டம்

பாண்டியன்குளம் கரும்புள்ளியான் கிராம கமக்காரர்களுக்கான காலபோக நெற்செய்கைக்கான கடன் வழங்குவதற்கான கலந்துரையாடல கரும்புள்ளியான் சிறுவர் பாடசாலையில் நேற்றுப் பிற்பகல் 4.00 மணிக்கு கமக்காரர் அமைப்புத தலைவர் இ.வல்லிபுரம் தலைமையில் இடம் பெற்றது. பாண்டியன்குளம் பிரதேச இணைப்பாளர் கி.கருணாகரன், பாண்டியன்குளம் பிரதேச கிராமிய வங்கி உத்தியோகத்தர் கருத்துரை வழங்கினார். இக்கலந்துரையாடலில் பொதுமக்கள் பலர்கலந்து கொண்டனர்.(24)

## சாவு அறிவித்தல்

### கோவிந்தர் பெரியதம்பி

முகாவில் இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் அம்பலப்பெருமாள் சந்தி, தேநீர்க்கடை உரிமையாளருமாகிய (அக்கராயன்) கோவிந்தர் பெரியதம்பி 20-07-2004 நேற்றுக் காலமாகிவிட்டார். இவர் பிள்ளைநாயகியின் அன்புக்கணவரும், கணேசமூர்த்தி கோவிந்தராசன், மோகனராசன் (லண்டன்), ஜெயராசன், தொண்டமான் (மாவீரர்), சற்குணராசன், ஜனேந்திரராசன், அஜந்தராசன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கலா, சுகந்தி, வசந்தி, ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 21.07.2004 இன்று முகாவில் இயக்கச்சி அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப.3.00மணியளவில் தகனக்கிரியைகளுக்காக முகாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(4836)


## சிவனருட்செல்வன் அரிசி ஆலையின்

### வாடிக்கையாளர்களுக்கு அன்பான அறிவித்தல்

எமது பொதி செய்யப்பட்ட 10kg, 50kg அரிசிப் பொதிகளில் S.R.M என சிவப்பு, பச்சை நிறங்களால் முத்திரை குத்தப்பட்டபொதிகளை மட்டும் கேட்டு வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

சம்பந்தன் அரிசி ஆலை
இல.93, கந்தபுரம்

உரிமையாளர்

சிவனருட் செல்வன் அரிசி ஆலை
உருத்திரபுரம் வீதி, கிளிநொச்சி.

(சி-9951)

# உக்ரெய்ன் நிலக்கரிச் சுரங்க வெடிவிபத்தில் முப்பத்தொரு பேர் பலி

## -11 பேர் நிலத்திற்கடியில் சிக்கியுள்ளதாகத் தகவல்

**உக்ரெய்னிலுள்ள நிலக்கரிச்சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 31 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளதோடு, 11 பேர் நிலத்திற்கடியில் சிக்கியுள்ளனர் என உக்ரெய்ன் நாட்டில் அவசர காலநிலை அமைச்சு தெரிவித்துள்ளது.**

நிலத்திற்கடியில் பல 100 மீற்றர் ஆழத்தில் இந்த வெடிவிபத்து இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்த 31 தொழிலாளரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நிலக்கரிச்சுரங்கத்தில் 54 தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். இவர்களில் 12 பேர் உயிர் தப்பியுள்ளனர்.

மீட்புப் பணியில் படையினரும், மீட்புப் பணியாளரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என உக்ரெய்னின் அவசரகால நிலை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



கிழக்குத் தீமோர்டிலி நகரில் அரச செயலகத்திற்கு முன்னால் அரசிற்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் முன்னாள் கெரில்லாக் குழு உறுப்பினரைக் கலைக்கும் நடவடிக்கையிலீடுபட்டுள்ள கிழக்குத் தீமோர் பொலிசார். அரசாங்கத்திலும் தேசிய பொலிஸ் அமைப்பிலும் சீர்திருத்தங்களை ஏற்படுத்த வேண்டுமெனக் கோரி இவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

# காஸாவில் இருமாடிக் கட்டடம் மீது இஸ். உலங்குவானூர்திகள் தாக்குதல்

## மூவர் காயம், கட்டடம் சேதம்

(ஜெருசலேம்)

காஸா முனையில் நேற்று இஸ்ரேலிய உலங்கு வானூர்திகள் பலஸ்தீனியர்களின் இரண்டுமாடிக் கட்டடமொன்றின் மீது நடத்திய தாக்குதலின் போது மூவர் காயமடைந்துள்ளதாக பலஸ்தீனியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.



நேற்று முன்தினம் ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட தனது உறவினரின் உடலிற்கு முன்னால் கவலையுடன் நிற்கும் ஈராக்கியர்.

இக்குண்டு வெடிப்புத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டு, 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இருபத்திநான்கு மணிநேரத்தில் நடைபெற்ற இரண்டாவது தாக்குதல் இதுவெனத் தெரிவிக்கப் படுகின்றது.

உள்ளூர் தீவிரவாதக் குழுவின் தலைவரான அவுயூசப் தங்கியிருந்த இடமாக இந்த இரண்டு மாடிக் கட்டடம் கருதப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன் போது கட்டடம் பலத்த சேதமடைந்துள்ளது. இருந்தபோதிலும் இத்தாக்குதல் மூலம் அவுயூசப் பாதிக்கப்பட்டாரா என்பது குறித்த தகவல்கள் இன்னும் வெளியிடப் படவில்லை.

# பாதுகாப்பு நிலைமையை சீராக்க நடவடிக்கை எடுக்குக

## -அரபாத்திடம் கொபிஅனான் கோரிக்கை

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தில் சீரழிந்து வரும் பாதுகாப்பு நிலைமைகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா தலைமைச்செயலர் கொபிஅனான் பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தைக் கேட்டுள்ளார்.

இதேவேளை காஸாப் பகுதியின் பாதுகாப்பிற்குப் பொறுப்பதிகாரியாகத் தமது உறவினர் நின்சா அரபாத்தை நியமிப்பதென்ற தனது முடிவை யசீர் அரபாத் மாற்றிக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


# சீனாவில் பெருமழை பலர் உயிரிழப்பு

(பிஜிங்)

சீனாவின் வடமேல் மாகாணமான குணானில் சனிக்கிழமை பெய்த கடும் மழை காரணமாக இரண்டு பேர் இறந்துவிட்டதாகவும் பல ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை தென் மேற்குப் பகுதி மாகாணத்திலும் கடுமையான மழைபெய்ததன் காரணமாக பலர் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் சாந்த கிலறிரா பகுதியில் பரவிக் கொண்டிருக்கும் காட்டுத்தீயை அணைக்க உலங்கு வானூர்தியிலிருந்து தண்ணீர் தெளிக்கப் படுகிறது.



# ஐரோப்பிய பாராளுமன்றில் அரசியல் மோதல்கள் இடம்பெறும்

## -ஆய்வாளர்கள் ஆரூடம்

ஐரோப்பியப் பாராளுமன்றத்திற்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் முதல் தடவையாக பிஸ்பேக்கில் நேற்றுக் கூடியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளின் 232 அங்கத்தவர்கள் கடந்த மாதம் தேர்வு செய்யப்பட்டனர்.

கடந்த மே மாதம் ஐரோப்பிய ஒன்றியம் விரிவாக்கப்பட்டது. புதிதாக 10 நாடுகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றிய ஒருங்கிணைவுக்கு எதிரான உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து, ஐரோப்பிய பாராளுமன்றத்தில் அரசியல் மோதல்கள் இடம் பெறும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஐரோப்பிய பாராளுமன்றத்தின் முதலிரு பணிகளாகப் பாராளுமன்றத்தின் தலைவர் தெரிவு ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவர் தெரிவு என்பன இடம் பெறவுள்ளது. புதிய ஐரோப்பிய பாராளுமன்றம் 20 உத்தியோக பூர்வ மொழிகளை உள்ளடக்கியுள்ளதாகவும் 450 மில்லியன் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன.

# நிலவில் மனிதன் கால்பதித்து முப்பத்தைந்து ஆண்டுகள் பூர்த்தி


(வோஷிங்டன்)

நிலவில் முதன்முறையாக மனிதன் கால்பதித்த நாளை அமெரிக்கா உட்பட உலகம் பூராவும் நேற்றுக் கொண்டாடப்பட்டுள்ளது.

1969 ஆம் ஆண்டு நேற்றைய நாளில் தான் நீல் ஆம்ஸ்ரோங் முதன் முதலில் நிலவில் காலடி வைத்து வரலாற்றில் சாதனையை ஏற்படுத்தினார்.

1969 யூலை 16 அன்று அமெரிக்காவின் அப்பலோ விண்கலம் நிலவிற்குச் சென்றது. இதில் நீல் ஆம்ஸ்ரோங், எட்வின், மைக்கில் கோலின் ஆகியோர் யூலை 20 இல் நிலவை அடைந்தனர். ஆறு மணி நேரம் பயணத்தின் பின்னர் இவர்களில் முதன் முதல் நிலவில் காலடி வைத்தவர் நீல்ஆம்ஸ்ரோங் ஆவார். அவரையடுத்து ஏனைய இருவரும் 15 நிமிடம் சென்ற பின்னர் நிலவில் காலடி வைத்தனர்.

நிலவில் முதல் மனிதன் காலடி வைத்து இன்று 35 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளதையடுத்து அமெரிக்கா உட்பட உலகில் இந்த நாள் கொண்டாடப்படுகின்றது.



கல்கத்தாவிலிருந்து 350 கி. மீ தொலைவிலுள்ள லக்ஸ்மி பூர் பகுதியில் விபத்திற்குள்ளான பேருந்தை மீட்கும் பொதுமக்கள்.

# இஸ். நீதியாளர் சுட்டுக்கொலை

(டெல் அவிஸ்)

இஸ்ரேலின் நகரமான சேகதீவில் மாவட்ட நீதிபதி ஒருவர் பலஸ்தீனத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த பலஸ்தீன துப்பாக்கிதாரியொருவரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நீதிபதி ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளதாகக் கூறப் படுகிறது.

இந்தக் கொலைக்கான காரணம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது.



பங்காள தேசில் வெள்ளத்தின் பாதிப்பில் சிக்கியுள்ள குடும்பம்.

# வெண்புறாவின் தீவிர நடவடிக்கைகளால் மக்களிடையே விழிப்புணர்வு அதிகரிப்பு

## -வெடி விபத்துக்கள் பெருமளவில் தவிர்ப்பு

(கிளிநொச்சி)

**வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் கண்ணி வெடிகள் தொடர்பாக மக்களிடையே மேற்கொண்டுவரும் தீவிரவிழிப் புணர்வு நடவடிக்கைகளால் நல்ல பயன்கிடைத்து வருவதாகத் தெரிய வருகிறது. இவ்வாறான செயற்பாடுகளால் மாணவர்கள், பொதுமக்கள் வெடிபொருட்கள் குறித்து எச்சரிக்கையுடனும் அவதானத்துடனும் செயற்பட்டு வருகின்றமை அண்மைக்கால அவதானிப்புகள் மூலம் தெரியவந்துள்ளது.**

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் கண்ணி வெடி தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்துக்களை மக்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் வழங்கி வருகின்றது. வன்னிப் பிரதேசத்தில் 300இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இவ்விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான விழிப்புணர்வுச் செயற்பாட்டின் மூலம் 60இற்கும் மேற்பட்ட இடங்களில் வெடிக்காத வெடிபொருட்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இவ்வருடம் சனவரி மாதம் தொடக்கம் யூன்மாதம் வரையான காலப்பகுதியில் 215 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாகவும், இவை உடனடியாக கண்ணிவெடியகற்றும் பிரிவினருக்குத் தெரியப் படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்நடவடிக்கையைத் துரிதப்படுத்தும் செயற்பாட்டைச் செய்யவென பிராந்தியக் கண்ணிவெடி செயற்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளதோடு இக்குழுவினால் கடந்த09/07அன்று நடைபெற்ற கண்ணிவெடி செயற்பாட்டு குழுக்கூட்டத்தில் துரிதமாக மக்களின் முறைப்பாடுகளை சம்பந்தப்பட்டவர்களிற்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப் பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இது இவ்வாறிருக்க இவ்வருடத்தில் .வன்னிப் பிரதேசத்தில் 05வெடிவிபத்துச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இதில் நால்வர் பலியானதுடன், நால்வர் காயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சியில் நடைபெற்ற வெடிவிபத்தில் மூவர் பலியானதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார். ஒட்டுசுட்டான் பகுதியில் ஒருவர் பலியானதுடன் துணுக்காய், கற்சிலைமடு ஆகிய பிரதேசங்களில் இருவர் காயமடைந்துள்ளனர். கடந்த 17ஆம் திகதி முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்புப் பகுதியில் வெடிவிபத்தினால் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார். சிறிலங்கா இராணுவத்தினரால் புதைக்கப்பட்டும், கைவிடப்பட்டும் உள்ள வெடிபொருட்களால் இவ்வுயிர், உடல் இழப்புக்களின் அனர்த்தங்கள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)

## நேர்முகத் தேர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிவரும் சுகாதாரப்பணியாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் நோக்குடன் இதுவரை காலமும் தொண்டர்களாகப் பணிபுரிந்தவர்களில் 23பேரைத்தெரிவு செய்வதற்காக நேர்முகத்தேர்வு எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளதாக மாவட்டப் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (20)

## முல்லையில் பண்பாட்டு அம்சங்களுடன் சிறப்புற நடந்த தமிழ் மொழித்தின விழா

(புதுக்குடியிருப்பு)

தமிழ் மொழித்தின விழா முல்லை மாவட்டத்தில் பாடசாலை ரீதியாக தமிழர்களின் பண்பாடுகளுடன் சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

முல்லை.மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை சகல பாடசாலைகளிலும் இவ்விழா சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இவ்விழாவில் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, அதற்கான வணக்கம் செலுத்தப்பட்டு, பாடசாலைகளின் கொடிகளும் ஏற்றப் பட்டன.தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. சில பாடசாலைகளில் கரகம், காவடி, கோலாட்டம் உட்பட பல நிகழ்வுகள் ஊர்வல நிகழ்வுகளாகவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் பெற்றோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். மாணவர்கள், ஆசிரியர்கள் தமிழர்களின் பண்பாட்டு உடைகளுடன் இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

உடையார்கட்டு மகாவித்தியாயலத்தில் காலை 10.00 மணிக்கு தமிழ் விழா சிறப்பாக இடம் பெற்றது. இத்தமிழ்த்தின விழா பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் திருமதி கை.அருள் ஞானமலர் தலைமையில் ஆரம்பமானது.விழாவிற்கான மங்கல விளக்கு ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை பாடசாலை அதிபர் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியினை பிரதி அதிபர் ஏற்றினார். தொடர்ந்து தமிழ்த்தின விழாவிற்கான கருத்துரையை ஆசிரியை திருமதி புவனேந்திரன், அதிபர் ராஜா ஆகியோர் வழங்கினர். கருத்துரையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் நிகழ்ந்தது.இதில் பாரம்பரியத்தைப் பேணும் வகையில் நாட்டியம்,நாடகம்,கவிதை, பாடல்கள்இடம்பெற்றன. (08,19)

## காணி உத்தரவுப் பத்திரம் முள்ளியவளையில் வழங்கல்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் காணி உத்தரவு பத்திரம் வழங்கல் நிகழ்வு கடந்த 16ஆம்திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை முள்ளியவளை கமநல சேவை அபிவிருத்தித் திணைக்களத்தில் கரைதுரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் செ.காசிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் முள்ளியவளை கிழக்கு முள்ளியவளை மத்தி, முள்ளியவளை மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டவர்களில் காணி அற்றவர்களுக்கு காணிக்கான உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் கரைதுறைப் பற்று உதவி அரசாங்க அதிபர் செ.காசிப்பிள்ளை, கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பணிமனை இலிகிதர்கள் கரைதுறைபற்று பகுதி காணி உத்தியோகத்தர் சோமபாலன்,முல்லை. மாவட்ட நிர்வாகசேவை இணைப்பாளர் பொன்னுச்சாமி, முள்ளியவளைப் பகுதி அரசியற்துறைப் பொறுப்பாளர் நாகமைந்தன், ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈழவன்(யோகன்), முள்ளியவளை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.சிவானந்தசிவம் ஆகியோருடன் அவ்வவ்ப் பகுதி கிராமசேவையாளர்கள் கலந்துகொண்டு காணி உத்தரவுப்பத்திரத்தை வழங்கினர்.

மேற்படிப் பகுதியில் முள்ளியவளை மத்தியில் 12 பேருக்கும், முள்ளியவளை கிழக்கில் 70 பேருக்கும், முள்ளியவளை மேற்கில் 33 பேருக்கும் காணி உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## முன்பள்ளி சிறார்களின் திறனாய்வு நிகழ்வு

முன்பள்ளிகள் சிலவற்றின் திறனாய்வு விளையாட்டுப் போட்டிகள் சில அண்மையில் நடைபெற்றுள்ளன. அதற்கமைய அக்கராயன் திருக்குடும்ப முன்பள்ளி உடற்திறன் செயற்பாட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை அருட்திரு ஜெயபாலன், அருட்திரு. சௌந்தரநாயகம், அரசியல்துறையை சேர்ந்த எழில்குமரன், ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகத்தை சேர்ந்த அன்ரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தமிழீழதேசியக் கொடியை அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் குரலமுதன் ஏற்றிவைத்தார். முன்பள்ளி ஆசிரியை திருமதி க. சண்முகவல்லி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வரவேற்புரையை முன்பள்ளி மாணவன் சீலன் நிகழ்த்தினார். 'கியுடெக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கிவருகின்ற முள்ளியவளை சென்திரேசா முன்பள்ளி சிறார்களின் திறனாய்வு விளையாட்டுப் போட்டி அண்மையில் முன்பள்ளி ஆசிரியை றஞ்சிதா தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஆதரவுடனும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட செந்தூரன், செந்தமிழ் முன்பள்ளிகளின் விளையாட்டு விழா கடந்த17ஆம் திகதி 230 மணிக்கு ஆரம்பமானது.



திருக்குடும்ப முள்பள்ளி சிறார்களின் திறனாய்வில்

செந்தூரன் முன்பள்ளித் தலைவர் அ.விக்கினராசா தலைமையில் செந்தமிழ் சிவன்சோலை விளையாட்டு மைதானத்தில் இந்நிகழ்வுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

புதுக்குடியிருப்பு ஞான ஒளி (முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி கடந்த 15 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு அப்பகுதியின் குடியிருப்புத்தலைவர் தேவதாஸ் தலைமையில் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது. உப்புமாவெளி நேசன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நேசன் முன்பள்ளி விளையாட்டு விழா நிறுவன இணைப்பாளர் நிவேகாந்தன் தலைமையில் நடைபெற்றது. (15,20,ஆ,08)

-சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்-

## முதலுதவிப் படையணியால் மாணவர்களுக்குப் பயிற்சி

(கிளிநொச்சி)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையணியால் சுகாதார திணைக்கள அனுசரணையில் ஏ.எஸ்.பி. நிறுவன நிதியுதவியுடன் நடாத்தப்படும் பாடசாலை மாணவர்களிற்கான முதலுதவிப் பயிற்சி நெறி கடந்த 17.18 ஆகிய தினங்களில் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை, இராமநாதபுரம் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் நடைபெற்றது.

ஒவ்வொரு பாடசாலையிலும் கணிசமான தொகை மாணவர்கள் கலந்து கொண்டிருந்த இச் செயலமர்வின் இறுதியில் முதலுதவிப் படைப்பிரிவினரால் தயாரிக்கப்பட்ட கைநூல் பயிற்சி நெறியில் பங்கு கொண்ட ஒவ்வொரு மாணவர்களிற்கும் வழங்கப்பட்டது மேலும் இப்பயிற்சி நெறியில் முதலுதவி, உடல் அமைப்பு தொழிற்பாடு, முதலுதவி செயன்முறைகள், தொற்று நோய்கள் சுகாதார நடைமுறைகள் தொடர்பான விரிவுரைகளை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர், உறுப்பினத் தொண்டர்கள் ஆகியோரால் வழங்கப்பட்டது.

இதனுடன் பயிற்சி நெறிகளை நிறைவு செய்தபின் ஒவ்வொரு பாடசாலைகளிற்கும் முதலுதவிப் பெட்டிகளும் அவற்றிற்கான மருந்துகளும், உபகரணங்களும் வழங்கப்பட்டன பயிற்சி நெறிகளை நிறைவு செய்த மாணவர்களிடம் இருந்து முதலுதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டதோடு பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ், இலட்சனைகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்ஜோன்ஸ் படைப்பிரிவினரால் கடந்த 3,4 ஆகிய தினங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயபுரம் பிரதேசத்தில் 2 ஆம் கட்டப்பயிற்சி நெறிகள் நடைபெற்று இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (12,15)

## புனானையில் ஒரு கோடி 20 இலட்சம் ரூபா கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டு அழிப்பு

### சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல்

(மட்டக்களப்பு)

புனானையில் ரூபா ஒரு கோடி இருபது இலட்சம் பெறுமதியான கஞ்சாத் தோட்டம் கண்டு பிடிக்கப் பட்டு அழிக்கப்பட்டது.

பொலநறுவை மட்டக்களப்பு எல்லையில் பாரிய அளவில் சட்ட விரோதமாக செய்கை பண்ணப்பட்ட கஞ்சாத் தோட்டம் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரையின் பேரில் கிழக்கு மாகாண மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் ரி.மகேந்திரன், மதுவரி பொறுப்பதிகாரி என்.சுசாதரன் ஆகியோர் இந்நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

6.5ஏக்கர் நிலப்பரப்பில் இச்சட்ட விரோத கஞ்சாச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. இந்நடவடிக்கையில் ஈடுபட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதவான் எ.எச்.எம். அஜ்மீர் முன்னிலையில ஆஜர்செய்யப் பட்டபோது 14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த வாரத்தில் காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, புதுக்குடியிருப்பு, மண்முனைப் பிரதேசங்களைச் சேர்ந்த சிலர் கஞ்சா வைத்திருந்ததாக மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டபோது 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். இவர்களிடம் இருந்து 3கிலோ 700 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

- லெப். செல்லக்கிளி அம்மானின் -

# 21 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**லெப். செல்லக்கிளி அம்மானின் 21 ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை மறுதினம் பல்வேறு இடங்களிலும் மிகவும் உணர் வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.**

அந்தவகையில் நாளை மறுதினம் லெப். செல்லக்கிளியம்மான் வீரச்சாவடைந்த திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்திப் பகுதியிலும், நல்லூரில் உள்ள சங்கிலியன் தோப்பிலும் விசேட நினைவு நிகழ்வுகளும் பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளில் யாழ். நல்லூர்க் கோட்ட அரசியல் துறையினரும், தேசியஎழுச்சிப் பேரவையினரும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர். (33)

# தென்மராட்சியில் 5 கிராமசேவகர் பிரிவில் மின்சாரமின்றி மக்கள் அவதி

(தென்மராட்சி)

மட்டுவில், சரசாலை, கல்வயல் பகுதி மக்கள் மின்சாரம் இன்றி கடந்த இரண்டரை வருடங்களாய் அவதிப்படுவதாக தெரியவருகிறது. மட்டுவில் கிழக்கு ஜெ.313, மட்டுவில் வடக்கு ஜெ.314, கிராம அலுவலர் பிரிவும் சரசாலை தெற்கு ஜெ.316 ,சரசாலை வடக்கு ஜெ.317,கல்வயல் ஜெ.305, இக்கிராம அலுவலர் பிரிவு மக்களே மின்சாரம் இன்றிப் பெரும் அவதிப்படுவதாகத் தெரியவருகிறது.

இப்பகுதிக்கு மின்சாரம் வேண்டி இப்பகுதி மக்கள் கடந்த ஆண்டில் இலங்கை மின்சார சபையின் கவனத்திற்கும், சாவகச்சேரி மின்சாரசபை, சுன்னாகம் தலைமை மின் அலுவலகம், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பதினைந்து தடவைக்குமேல் மகஜர்கள் அனுப்பியும் எந்தவொரு உருப்படியான நடவடிக்கைகளையும் மின்சாரசபை எடுக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதிக்கென ஒதுக்கிய நிதியும் வேறு பகுதிக்கு திருப்பப்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் மின்சாரசபைமீது புகார் தெரிவிக்கின்றனர். தற்பொழுது சாவகச்சேரியில் இருந்து இப்பகுதிக்குச் செல்லும் மின்சாரம் முன்னாள் நகரசபை ஆணையாளர் இல்லம் உள்ள பெருங்குளம் பிள்ளையார் கோயில் வரை மட்டுமே செல்வதாக தெரிகிறது இந்த ஐந்துகிராம அலுவலர்பிரிவுகளில் வாழும் 1500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின்பாவனையின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிகிறது எனவே சம்பந்தப்பட்ட இப்பகுதிகள் தொடர்பாக மின்சாரசபை கூடுதல் கவனமெடுத்து இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிவர்த்தி செய்ய முன்வரவேண்டுமெனக் கோரியுள்ளனர். (28)

# யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரும், யாழ். பல்கலைக் கழக மாணவ ஒன்றியத்தினரும் ஒன்றிணைந்து சமகால அரசியல் கருத்தரங்குகளைத் நடத்திவருகின்றனர்.இதன் போது பல்வேறு விடயங்கள் குறித்து கருத்தரங்குகள் பரிமாறப்பட்டு வருகின்றன.

*யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் திட்டமிட்ட கலாசாரச் சீரழிவுகள்

* யாழ். மாவட்டத்தில் அமைக்கப் பட்டு வரும் புத்த விகாரைகள்

*அரசாங்கம் சமாதானம் எனப் பேசிக்கொண்டு மீண்டும் தன்னைப் போருக்குத் தயார்படுத்தல் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப் பட்டு வருகின்றது.இக்கருத்தரங்கின் தொடர்ச்சியாக எதிர்வரும் 20,21,22 ஆகிய தினங்களில் தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். பாடசாலைகளில்

# சுகாதாரக் குறைபாடுகள் குறித்து அரச அதிபர் விசேட கவனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் சுகாதாரக் குறைபாடுகள் மற்றும் குடிநீர்ப் பிரச்சினைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பாடசாலைகளில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் குடிநீர்ப் பிரச்சினைகள் காரணமாக மாணவர்கள் எதிர்கொள்ளும் நோய்த் தாக்க அபாயங்களைக் கவனத்தில் கொண்டே யாழ். அரச செயலகத்தால் இது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதனடிப்படையில்பாடசாலைமலசல கூட வசதிகள் மற்றும்குடிநீர்,சுகாதாரம் என்பன தொடர்பாக உள்ள குறைபாடுகள் நீக்கப்படவுள்ளன.(33)

# தாக்குதல் ஒத்திகைகளில் யாழ்.குடாநாட்டுப் படையினர்

யாழ் குடாநாட்டில் விசேட தாக்குதல் ஒத்திகைகளில் சிறிலங்காப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட சிறிலங்காப் படைத்துறை தலைமையகம் அறிவித்துள்ளது. சிறிலங்காப் படைத்தரப்பினர் சிறு குழுக்களாகப் பிரிந்து தாக்குதல் நடாத்துவதற்கான திறனை அதிகரித்துக் கொள்ளும் வகையில் இந்தப் பயிற்சிகள் இடம்பெற்று வருவதாகவும், இவை இரண்டு மாதகால பயிற்சி நெறிகளாக இடம்பெறுவதாகவும் படைத்துறைத் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது. இதேவேளை, இம்மாத ஆரம்பத்தில் மட்டும் 12 அதிகாரிகளை உள்ளடக்கிய சுமார் ஆறு படைக்குழுக்கள் இப்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. எந்தவிதமான சவால்களையும் எதிர்கொள்ளும் வகையிலேயே இப்பயிற்சி நெறிகள் அமைந்துள்ளதாகவும் யாழ் மாவட்ட சிறிலங்கா படைத்துறைத் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது.

# மிருசுவில் பொதுநூலகம் மீண்டும் சொந்த இடத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மிருசுவில் பொது நூலகம் மீண்டும் அதன் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்படி நூலகக் கட்டடத்தில் படையினர் நிலை கொண்டிருந்ததினால் அந்த இடத்தில்இயங்காதிருந்த இந்நூலகம் இடம்பெயர்ந்து உசனில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வந்தது.

எனினும் அப்பகுதி மக்கள் விடுத்து வந்த கோரிக்கைகளைத் தொடர்ந்து மிருசுவில் பொது நூலகக் கட்டடத்தை விட்டு படையினர் அகன்றதால் மீண்டும் அது தன் சொந்த இடத்திலேயே இயங்க ஆரம்பித்துள்ளது. (33)

# கோயிலாக்கண்டி சமூக ஆர்வலர் தச்சன் தோப்பில் தாக்கப்பட்டார்

(தென்மராட்சி)

கோயிலாக்கண்டி சமூக ஆர்வலர் குடும்பத்தாருடன் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது கோயிலாக் கண்டியில் உலகவங்கியின் உதவியுடன் கட்டப்பட்டு வரும் வீட்டுத்திட்டத்தில் நடந்த முறைகேடுகளை, குளறுபடிகளைச் சுட்டிக்காட்டினார் என்பதனால், இத்திட்டம் கிடைக்கப் பெற்று பின்னர் இத்திட்டத்தில் இருந்து நீக்கப்பட்ட ச.கந்தசாமி என்பவரால் தச்சன் தோப்பு எனும் இடத்தில் வைத்து சைக்கிளில் குடும்பத்துடன் சென்று கொண்டிருந்தசமூக ஆர்வலரான செ.ஆனந்தரஞ்சன் என்பவர் நேற்று முன்தினம காலை எட்டு மணியளவில் வழி மறித்துத் தாக்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் இவருக்கு லேசான காயம் ஏற்பட்டது. மனைவியும், குழந்தையும் சைக்கிளில் இருந்து தள்ளிவிடப்பட்டதால் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். இச்சம்பவம் குறித்து கைதடி தமிழீழ அரசியல் துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (28)

# டெங்கு ஒழிப்பிற்கான தே. இயக்கம் யாழ். குடாநாட்டில் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய் ஒழிப்பிற்கான தேசிய இயக்கம் யாழ். குடாநாட்டில் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

உயிர் கொல்லி நோயான டெங்கு நோயை யாழ். குடாநாட்டிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவே இவ் இயக்கம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இக்குழு யாழ். அரச அதிபர் சே.பத்மநாதன் தலைமையில் பிரதேச செயலாளர்கள்,அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு செயற்படவுள்ளது.இவ்வாறு செயற்படவுள்ள இயக்கம் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் யாழ். குடாநாட்டில் அறிமுகம் செய்துவைக்கப்படவுள்ளது. (33)

# யாழ்.இல் பங்குச் சந்தையை அறிமுகப்படுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பங்குச்சந்தையை அறிமுகம் செய்வதற்கான முயற்சிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்தகால யுத்த அனர்த்தங்கள் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்ட முதலீட்டாளர்களின் அபிவிருத்தி நலமேம்பாடுகளையும், யாழ்.குடாநாட்டின் பொருளாதார மேம்பாட்டையும் விருத்திசெய்யும் நோக்குடனேயே இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.இந்நடவடிக்கைகளில் யாழ்.வணிகர் கழகம் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. (33)

# "கரீராஸ்" நிறுவனத்தின் உதவியுடன் பொது மண்டபம் அமைக்க ஏற்பாடு

போரினால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி பகுதிகளில் பொது மண்டபங்களை மக்களுக்கு கட்டித்தர "கரீராஸ்" என்ற தொண்டு நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கு அமைவாக தென்மராட்சி பிரதேச செயலகத்துடன் இணைந்து இந்த நிறுவனம் பொது மண்டபங்களை கட்டுவதற்கு இடங்களைத் தேர்ந்தெடுத்துள்ளன. கைதடி, நாவற்குழி கரம்பைக்குறிச்சி, கொடிகாமம்தெற்கு, சங்கத்தானை, சரசாலைதெற்கு போன்ற இடங்களில் இப்பொது மண்டபங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன எனத் தெரியவருகிறது. (28)


# வீதி விளக்குகள் பொருத்த 65 இலட்சம் ரூபா நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி மின் விளக்குகளைப் பொருத்துவதற்காக 65 இலட்சம் ரூபா நிதி யாழ. அரசஅதிபர் செ.பத்மநாதனால் மின்சாரசபைகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வின் மூலம் யாழ்.நகர் உட்பட யாழ்.மாநகரசபையின் சகல கிளை வீதிகள், பிரதானவீதிகள் என்பவற்றில் மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. (33)





பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் பத்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி யாழ். நல்லூரில் நடாத்தப்பட்ட பாரம்பரிய கலை நிகழ்வுகள். (36) (படம் சீலன்)

# சமாதானத்தின் அங்கமாகக் "கூட்டு"

இனமத வேறுபாடுகள் இன்றி சமாதானத்தின் அங்கமாக சகல பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த மாணவர்களிடையேயும் புரிந்துணர்வைக்கட்டியெழுப்புவதனூடாக மக்களிடையே ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் களனி பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜெயந்த செனிவரட்ண, பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் நந்தகுமார், சமாதானத்துக்கான அபிமானி திசானி ஜெயவீர உள்ளடங்கலாக கொழும்பு மற்றும் களனி பல்கலைக்கழக மாணவர்கள் 33பேர் கொண்ட குழுவினர் அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு வந்து மாணவர்களுடன் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டனர். இவர்கள் இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் சென்று மாணவர்களிடையே கூட்டு ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி "கூட்டு" எனும் சஞ்சிகையை உருவாக்கத் தீர்மானித்துள்ளனர். இச்சஞ்சிகையானது அரசியல் கலப்பற்ற முறையில் வெளியிடப்படவுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளை யாரும் ஒடுக்கக்கூடாது என்கிறார் களனி பல்கலைக்கழக பேராசிரியர் ஜெயந்த செனிவரட்ண. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு 05.07.2004 அன்று வந்திருந்த பேராசிரியரை செவ்வி கண்டபோது,

**கேள்வி:- தமிழ் மக்களின் பொங்குதமிழ் நிகழ்வையிட்டு நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

எனது கருத்தில் தமிழ் மக்களின் உணர்வலையாகவே இதனைக் கருதுகிறேன். யுத்த காலத்தில் உணர்வலைகள் ஆயுதமுனைகளால் அடக்கப்பட்டு காணப்பட்டன. இதனால் தமது உணர்வலைகளை வெளிக்கொணரும் ஒரு களமாகவே நான் இதைப் பார்க்கிறேன். தமிழ் இனம் ஒரு தேசியஇனம். தமிழரது உரிமைய யாரும் ஒடுக்கக்கூடாது. பொங்குதமிழ் தொடர்பாக தென் பகுதி மக்களிடையே தவறான கருத்து நிலவுகிறது. இது நீக்கப்படவேண்டும். தெற்கில் உள்ள மாணவர்கள் பலர் இனிவரும் காலங்களில் பொங்குதமிழ் நிகழ்வுகளில் கலந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் தரும்படி கேட்டுள்ளனர்.

**கேள்வி:- பெரும்பாலான தென்பகுதி மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்களா?**

சமாதானத்தை விரும்புகிறார்கள். ஆனால் தங்களை அர்ப்பணிக்கத் தயங்குகிறார்கள்.

**கேள்வி:- தென்பகுதி மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்றால் ஏன் இனவாதப் போக்குடைய ஜே.வி.பி.யினரை ஆதரிக்கிறார்கள்?**

தென்பகுதியில் உள்ள கிராமப்புற மக்கள் தொடர்பாக குரல் கொடுப்பது ஜே.வி.பி.யே அத்தோடு மற்றைய கட்சிகளில் உள்ளது போன்று அரசியல் ஊழல் குன்றவு. ஜே.வி.பியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமது சம்பளத்தைக் கூட மக்களுக்குக் கொடுக்கின்றார்கள். மக்கள் ஊழல், பணம், சலுகைகளைக் கருத்திற்கொண்டே அவர்களுக்கு வாக்களிக்கிறார்கள். அத்தோடு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே இனவாதத்தை பேசுகிறார்கள். இனப்பிரச்சினைக்கு சமஷ்டியை விட வேறு தீர்வு இல்லை என்பதை தற்போது அவர்களும் உணர்ந்து கொள்கிறார்கள்.

சந்திப்பு
சீலன்

**கேள்வி:- இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஏன் ஜே.வி.பி எதிர்ப்பை வெளிப்படுத்துகிறது?**

இடைக்கால நிர்வாகம் தொடர்பான சரியான விளக்கம் ஜே.வி.பி.யினரிடம் இல்லை. இதனாலேயே அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அத்தோடு தமிழீழ விடுதலைப்புலிகளின் தடையை நீக்க எதிர்ப்புத் தெரிவித்த ஜே.வி.பி தற்பொழுது புலிகளைத் தடை செய்தது முட்டாள்தனம் என உணர்ந்துள்ளது.

**கேள்வி:- இனவாதம் பேசுகின்ற ஜே.வி.பி, பௌத்த பிக்குவை பாராளுமன்றத்தில் தூக்கிப் பந்துவிளையாடி அம்மதத்தையே இம்சைப்படுத்தியது. இந்த விடயத்தை நீங்கள் எவ்வாறு கருதுகிறீர்கள்?**

இந்த விடயத்தில் நாங்கள் மிகவும் கவலைப்படுகின்றோம். அத்தோடு இவ்விடயத்தில் ஜே.வி.பி மட்டும் சம்பந்தப்படவில்லை; வேறுசில பாராளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர். ஜே.வி.பியைப் போன்று ஹெல உறுமயவும் இனவாதப் போக்குடைய அமைப்பு.

**கேள்வி:- ஹெல உறுமயவின் 2004 பாராளுமன்றப் பலம்பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

ஹெல உறுமயவிற்கு கிடைத்த வாக்குகள் எல்லாம் சமாதானத்திற்கு எதிரானவை அல்ல. ஐ.தே.கட்சி மற்றும் பொது சன ஐக்கிய முன்னணி ஜே.வி.பி.யினரை வெறுத்தவர்கள் இவர்களை ஆதரித்தனர்.

---

# ஒகஸ்ட்-10 இல் உயர்தரப் பரீட்சை முடிவுகள் வருட இறுதிக்குள் பல்கலைக்கழக அனுமதி

## கொழும்பில் அதிகாரிகள் அறிவிப்பு

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் 10 ஆம் திகதி அளவில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

முதல் தடவையாக இந்த வருடத்தில் பரீட்சை எழுதி பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்ற மாணவர்கள் இந்த வருடத்திலேயே பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதன் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஒகஸ்ட் 11 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி வரை விண்ணப்பங் களைக் கோரவுள்ளது.மாணவர்களுக்கான கைந் நூல் ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வழங்கப்படுவதுடன் இசட் புள்ளிகள் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வெளியிடப்படும்.

2004/2005 கல்வியாண்டுக்கான மாணவர்கள் இம்முறை முதன் முதலாக யாழ்.பல்கல்லைக்கழகத்திலேயே டிசம்பர் மாதம் 22ஆம் திகதி அனுமதிக்கப்படுவர் என்று பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்குமான அனுமதியை சனவரி முதல் வாரத்தில் பூர்த்தி செய்ய மேற்படி ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

---

# கமக்கார அமைப்புக்கள் மீள் புனரமைப்பும், தெரிவும்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பகுதி கமநலசேவை அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட கிராம கமக்கார அமைப்புக்கள் மீள்புனரமைப்பு மற்றும் புதிய கமக்காரர் அமைப்புக்கள் தெரிவு என்பன முள்ளியவளை கமநலசேவை அபிவிருத்தித் திணைக்களப் பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி சுப்பிரமணியம் இராசலட்சுமி தலைமையில் இடம்பெற்று வருகின்றன.

வட்டுவாகல் கிராமத்தில் புதிய கமக்காரர் அமைப்புத் தெரிவு இடம்பெற்றது. வட்டுவாகல் கன்னியார் பொதுமண்டபத்தில் நடைபெற்று, புதிய கமக்காரர் அமைப்புக்கான தலைவராக ந.செல்வரட்ணம், செயலாளராக ஆ.நாகரட்ணம், பொருளாளராக திருமதி. க.லலிதாதேவி ஆகியோருடன் ஏழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி தெரிவின்போது கமக்காரர் அமைப்பில் 100ரூபா செலுத்திஅங்கத்தவராக இணைவதுடன், ஒவ்வொரு அங்கத்தவரும் வருடம் ஒன்றிற்கு 25ரூபா சந்தாவாகச் செலுத்தவேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டதாக முள்ளியவளை கமநலசேவை அபிவிருத்தித் திணைக்களப் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (ஆ)

---

# மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானம்மூலம் சீராக்கல்

(கிளிநொச்சி)

விசுவமடு மாவீரர் துயிலும் இல்லம் கடந்த சனிக்கிழமை சிரமதானப் பணி மூலம் சீர் செய்யப்பட்டது. தமிழீழபோக்கு வரத்துக்கழகப் பணியாளர்கள், வருவாய்ப்பகுதிப் பணியாளர்கள், பாண்டியன் வாணிபப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இம் மாவீரர்துயிலும் இல்லத்தைச் சீர் செய்தனர். ஒவ்வொரு மாதத்திலும் 3 ஆவது சனிக்கிழமைகளில் இப்பணியாளர்களினால் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (15)

---

# துணுக்காய் கல்வி வலயத்தில் பெற்றார் விழிப்புணர்வு நிகழ்வு

(மல்லாவி)

வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் ஆரம்பப் பிரிவுக்கல்வி மேம்பாட்டுக் குழுவினரின் ஆதரவில் பெற்றார். விழிப்புணர்வுச் செயற்பாட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை, மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் துணுக்காய்க் கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் பங்குபற்றின. தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களின் பெற்றோர்கள் வருகை தந்திருந்தனர். ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் கல்லூரி மாணவர்களும் இணைந்து குழுச் செயற்பாடுகளை வழிநடத்தினர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் செயற்பாட்டில் ஆர்வத்துடன் இணைந்து செயற்பட்டனர். சுமார் 1160 இற்கு மேற்பட்ட பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுடன் சமூகமளித்திருந்தனர்.

மாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்து வருகை தந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் மற்றும் செல்வி.சி.உதயா, இ.இராஜேஸ்வரன், க.விக்கினராசா ஆகியோர் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றனர்.

பிற்பகல் 3.00 மணியளவில் இச் செயற்பாடுகள் முடிவடைந்ததும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரிற்கான சந்திப்பும் நடைபெற்றது. இதன்போது மாணவர்களின் கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்புப் பற்றியும் கலந்துரையாடப்பட்டு நிகழ்வு நிறைவு பெற்றது. (24)

---

# செட்டிகுளம் பிரதேச முன்பள்ளிகளின் கண்காட்சி

வவுனியா மாவட்ட செட்டிகுளம் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தால் அப்பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகளின் கல்விக் கண்காட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசபாதம் தலைமையில் செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம் பெற்றது.

நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்கள் விருந்தினரைக் கௌரவித்த பின்னர் மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியினை செட்டிகுளப் பிரதேசக் கட்டமைப்புத் தலைவர் ஜனாப்,எஸ்.முகமட்ஜாபீர் ஏற்றினார். பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவபாதம் கிஷோர் கண்காட்சியை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். பெருந்தொகையான முன்பள்ளிச சிறார்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் ,இக் கண் காட்சியினைப் பார்வையிட்டனர்.

---

# மட்டக்களப்பு சிறைச்சாலைக் கொலை கொழும்பிலிருந்து சென்ற குழு விசாரணை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பாக விசேட குழுவொன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை காலை சிறைச்சாலைக்குள் வைத்து கருணாவின் பேச்சாளர் எனக் கூறப்படும் சச்சி மாஸ்டரும் அவரது சகாவும் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் படுகாயமடைந்த சம்பவம் தொடர்பாக பொலிசாரும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் விசாரணை நடத்திவரும் அதேநேரம் கொழும்பி லிருந்து சென்றுள்ள விசேட குழுவொன்றும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவர்களை சுட்டுக்கொன்றவர்க்கு எவ்வாறு துப்பாக்கி, கைக்குண்டுகள், கையடக்க தொலைபேசி என்பன கிடைத்தன என்பது குறித்து விசாரணை நடைபெறவுள்ளதாகவும் மர்சூக் தெரிவித்தார். கொல்லப்பட்ட சச்சி மாஸ்டரின் கைத்துப்பாக்கியையே இதற்குத் தான் பயன்படுத்தியதாகவும் அவரிடமிருந்தே கைக்குண்டுகள் மற்றும் கையடக்கத் தொலைபேசியை கைப்பற்றியதாகவும் துப்பாக்கிதாரியென்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட புவிதரன் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்திருந்தார். இதே நேரம் துப்பாக்கிதாரிக்கு சிறைக்காவலர்கள் அல்லது அதிகாரிகள் எவராவது உதவியதாக விசாரணைகள் மூலம் தெரியவந்தால் அவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மர்சூக் கூறியுள்ளார். சம்பவம் நடைபெற்று சில மணிநேரத்தில் சரணடைந்த துப்பாக்கி நபர் விசாரணைக்காக கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு கொண்டுவரப்பட்ட பின் மொனறாகல சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளமை தெரிந்ததே.

---

# மாவட்ட வைத்தியசாலையில் மாணவர்கள் சிரமதானம்

கிளிநொச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவர்களால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உட்பகுதிகள் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் இச்சிரமதானப் பணியை மேற்கொண்ட மாணவர்களின் முன்மாதிரியான செயற்பாடு பாராட்டிற்குரியது. (கு)

---

# இயந்திரங்கள் வழங்க ஏற்பாடு

(முள்ளியவளை)

நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட கமநலசேவை அபிவிருத்தித் திணைக்களங்களுக்கு உழவு இயந்திரங்கள் , இருசில்லு உழவு இயந்திரம், நீர்இறைக்கும் இயந்திரம், நாசினி தெளிக்கும் கருவி என்பன ஒதுக்கீடு செய்யப்பட்டு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் வைத்து இம்மாத இறுதிக்குள் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ஆ)

தவிர்க்க முடியாத காரணத்தால் ஆதவனின் "அனுபவப் பகிர்வு "தொடர் இவ்வாரம் இடம பெறவில்லை என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.




**12.** ஐ. ம.சு முன்னணியின் கூட்ட ணியான ஜே.வி.பி புலிகளுடன் அரசாங் கம் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுவரொட்டிப் போராட்டத்தை ஆரம்பித்தது.



சமாதானத்துக்கு எதிராகப் போராட்டம்

முப்படைத் தளபதிகளுடன் யாழ். குடா நாட்டிற்கு விஜயம் செய்த பிரதிப் பாது காப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க பலாலி இராணுவத் தலைமைய கத்தில் நடத்தப்பட்ட உயர் மட்ட மாநாட் டில் கலந்து கொண்டு குடாநாட்டில் பாது காப்பு நிலவரம் குறித்து கலந்துரை யாடினார்.

**13.** நோர்வேத் தூதுவரைச் சந்தித்த அரசியல் துறைப்பொறுப்பாளர் தலைமை யிலான குழுவினர் யுத்த நிறுத்த உடன் படிக்கையை செம்மையாக நடைமுறைப் படுத்துவதன் அவசியம் குறித்து கலந்து ரையாடினர்.


நோர்வே தூதருடன் ஆராய்வு

➡ தேச விரோதிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மட்டக்களப்பு நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதிராசா வீரச்சாவு.

➡ வடக்கு- கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்கு விஜயம் செய்த நோர்வேத் தூதுவருக்கு செயலகத் தலைவர் எம்.எல் கருணாரட்ண அவர்கள் மக்களின் அடிப்ப டைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சர்வ தேச சமூகம் அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தெளிவுபடுத்தினார்.


தூதரிடம் தெளிவுபடுத்தல்

**14.** யாழ். நீதிமன்றக் கட்டடத்திற்கான அடிக்கல் பிரதம நீதியரசர் சரத் என்.சில் வாவினால் சம்பிரதாய பூர்வமாக நாட்டி வைக்கப்பட்டது.

➡ இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டே கொட கடற்படைத் தலைமை யகத்திற்கு விஜயம் செய்து செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

**15.** தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் தாக்குதல் தளபதியும் மூத்த தளப தியுமான சாள்ஸ் அன்ரனியின் 21ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் சாள்ஸ் அன்ரனி படையணியின் போர் வீரர்களிற் கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன.


21ஆவது நினைவு நிகழ்வில்

➡ மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கருணாவின் நெருங்கிய சகா சச்சி மாஸ்ரர் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார்.


**16.** கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலை மைகளை கண்டறியும் முகமாக அரசாங்க சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகம் ஜயந்த தனபால மட்டக்களப்பிற்கு விஜயம்

➡ ஆறு நாடுகள் பங்குபற்றும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பம்.


ஆசியக்கிண்ணக் கிரிக்கெட்

**17.** மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து இலங்கையில் சமகால அரசியல் நிலைமை, மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமைகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினர்.

➡ யாழ் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக் கென சிறிலங்காப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் நாட்டிவைக்கப்பட்ட அடிக்கல் இனந்தெரியாதோரால் கிளறி எடுக்கப்பட்டு நல்லூர் பின்வீதியில் போடப் பட்டது.


நடவடிக்கைக்கு எதிர்ப்பு

➡ தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயத் திலிருந்து படையினரால் 200 ஏக்கர் விவசாய நிலங்கள் கையளிக் கப்பட்டன.

➡ .இலங்கை அரசியல் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தேடும் முயற்சியாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தியா புறப்பட்டார்.

**18.** ஓயாத அலைகள் -01 இராணுவ நடவடிக்கை மூலம் சிறிலங்காப் படைகளின முல்லைத்தளம் வெற்றி கொள்ளப்பட்ட எட்டாம் ஆண்டு நிறைவு நாள் முல்லை நகரில் வெகுசிறப்பாக நடைபெற்றன.


வெற்றிநாள் மகிழ்வில்

➡ மேஜர் முரளியின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றிய வீரவீராங்கனைகளை தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்தித்து வாழ்த்தினார்.

# பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை பிக்குகள் கைவிடமாட்டார்கள்

## ஹெல உறுமய பொதுச் செயலர் அறிவிப்பு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் மக்களால் தெரிவு செய்யப் பட்ட பாராளுமன்ற உறுப்பினர்க ளான பௌத்த குருமார் ஒரு போதும் தமது உறுப்பினர் பத விகளை கைவிடப் போவதில்லை யென ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் பாராளு மன்ற உறுப் பினருமான உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் போது மக்க ளுக்கு வழங்கிய உறுதி மொழி களை நாம் மீறமாட்டோம். எந்தக் கோணத்தில் எதுவிதத் தடைகள் வந்தாலும் நாட்டிற்காக செய்ய வேண்டிய சேவையை முன்னெடுப் போம். அதிலிருந்து பின்னிற்கமாட் டோம்.

ஹெல உறுமய பிக்குமார் தமது கொள்கைகளுக்கு முரணாக செயற்படுகிறார்களென்றால் அவற்றை விளக்கிக் கூறுமாறும் அது பிழையெனில் திருத்திக் கொள்ளத்தயார்.

ஹெல உறுமயவின் முன்னாள் பொதுச் செயலாளரின் குற்றச் சாட்டுகளுக்கு பதிலளித்துள்ள தம்மாலோக தேரர், பௌத்த குருமார் ஒன்றிணைந்து எமது கட்சி யின் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுமானால் வெற்றிகரமான பயணத்தை மேற்கொள்ள முடியும். இதில் சாதாரண நபர்கள் பதவி களை எதிர்பார்க்காது பக்தர்க ளாகவே இருக்க வேண்டும். இது தொடர் பில் எமது கட்சி எதிர்காலத் தில் நடவடிக்கைகளை மேற்கொள் ளும்.கட்சியின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு தற் போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணத் திட்டங்கள் முன்னெடுக்கப் படும் என்றும், உடுவே தம்மா லோக தேரர் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் பதிவு நடவழிக்கைகள் கண்டியில் மீண்டும் ஆரம்பம்

கண்டி நகரில் மீண்டும் தமிழர்களை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நகரிலுள்ள தமிழர்களின் கடைகள், வீடுகளில் தங்கியிருப்போரை பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் கண்டிப் பொலிஸாரால் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதில் வீடுகளிலும், கடைகளிலும் தங்கியிருப்போரின் பெயர்,அடையாள அட்டை இலக்கம்,தொழில் போன்ற விபரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கண்டிப் பொலிஸாரிடம் வினாவிய போது, எதிர்வரும் 22 ஆம் திகதி எசல பெரகரா ஆரம்பமாவதை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவற்காக மீண்டும் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கண்டி பொலிஸ் பொறுப்பதிகாரி எட்மன் மகேந்திரா தெரிவித்தார்.

# தொலைபேசிக் கட்டண புதிய அறவீடு; பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் வழக்கு

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களின் தொலைபேசிக் கட்டணம் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் இருந்தால் அதனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் மாதாந்த சம்பளத்தில் இருந்து பெறுவதற்கு எடுத்த முடிவை எதிர்த்து கொழும்பில் உள்ள 10 பொலிஸ் நிலையங் களின் பொறுப்பதிகாரிகள் மேன் முறையீட்டு நீதிமன்றத் தில் வெள்ளிக்கிழமை மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

நிதியமைச்சின் செயலாளர் இவ்வாறு விடுத் துள்ள சுற்று நிருபத்தை இரத்துச் செய்யுமாறும் மனு வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புறக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட கொழும்பு. பிரதேசத்தில் உள்ள பத்து பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில், பொலிஸ் மா அதிபர், நிதியமைச்சின் செயலா ளர், திறைசேரி செயலாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், நிர்வாகப் பிரிவு, கொழும்பு மத்தி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நிதியமைச்சின் செயலாளர் விடுத்துள்ள மேலதிக தொலைபேசிக் கட்டணத்தை சம்பளத்தில் இருந்து அற விடும் சுற்று நிருபத்தை அமுல் செய்யுமாறு ஜூன் 7 ஆம் திகதி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிர்வா கப் பிரிவு கொழும்பு மத்தி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இதனை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கடிதம் மூலம் எமக்கு அறிவித் திருந்தார் எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். ஏனைய அரச ஊழியர்கள் ஒரு நாளைக்கு எட்டு மணிநேரமே வேலை செய்கின்றனர். அத்துடன் 5 நாட்கள் அவர்க ளின் வேலை நாளாகும். ஆனால் பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரிகள் 16 மணித்தியாலங்கள் ஒரு நாளைக்கு வேலை செய்கின்றனர். அதுவும் ஏழு நாட்களும் வேலை செய்கின்றனர்.

2500 ரூபா தொலைபேசிக் கட்டணம் என்பது போதாது. எமது சம்பளம் மாதாந்தம் 9 ஆயிரம் ரூபாவேயாகும்.பொலிஸ் நிலைய தொலைபேசிகளைப் பூட்டி வைக்க முடியாது. அவை உத்தியோக பூர்வமாக பாவிக்கப்படுகின்றன .எனவும் மனுவில் குறிப்பிட்டுள் ளனர்.

# ஒகஸ்ட் முதல் எண்ணெய் விலை படிப்படியாக அதிகரிக்கும்!

## -மத்திய வங்கி கூறுகிறது

(கொழும்பு)

அடுத்தமாதம் தொடக்கம் எண்ணெய்விலை படிப்படியாக அதி கரிக்கப்படும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்திருப்பதால் பெற் றோலியக் கூட்டுத்தாபனம் விலையை அதிகரிக்க வேண்டும் என ஏற்க னவே அரசாங்கத்திற்கு அறிவித் துள்ளது.உலக சந்தையின் எண் ணெய் விலை அதிகரிப்பால் அர சாங்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு 40 கோடிரூபா நஷ்ரம் ஏற்பட்டுள்ள தென்று அறிக்கைகள் கூறுகின்றன.

# ஐ.ம.சு.மு அரசினால் அகற்றப்பட்ட "லேக்ஹவுஸ்" பத்திரிகை ஆசிரியரின் மனு விசாரணைக்கு ஏற்பு

## நவம்பர் மாதத்திற்கு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து அரசியற் பின்னணியின் அடிப்படையில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சிங்கள வாரப் பத்திரிகையான சிலுமின பத்திரிகையின் பொறுப்பாசிரியர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டி சிரேஷ்ட பத்திரிகையாளர் குருவிட்ட பண்டார தாக்கல் செய்த அடிப்படை மனிதஉரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளதாக அறிவித்த உயர் நீதிமன்றம் அடுத்த கட்ட விசாரணையை நவம்பர் மாதம் 05 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

இம் மனு மீதான பூர்வாங்க விசாரணை உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஹெக்டர் எஸ்.யாப்பா, சிராணி திலகவர்த்தன, என்.கே. பிரதமஉடுலகம ஆகியோர் முன்னிலையில் வெள்ளிக் கிழமை இடம் பெற்ற போதே நீதியரசர் ஹெக்டர் எஸ்.யாப்பா இதனை அறிவித்துள்ளார்.

தனது ஆசிரிய பீட சுதந்திரத்தை விட்டுக் கொடுக்க மறுத்ததுடன் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தற்போதைய தலைவர் ஜனதாச பீரிஸின் அரசியல் கொள்கையோடு இணங்கித் பொறுப்பாசிரியர் கடமையைச் செய்ய மறுத்ததாலேயே பதவி நீக்கம் செய்யப்பட்டதாக மனுவில் குறிப் பிட்டுள்ள மனுதாரர் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பொறுப்பான பதவிகளுக்கு அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் உடடியாக நியமிக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

லேக்ஹவுஸ் நிறுவனம் அதன் பணிப்பாளர் ஜனதாச பீரிஸ் ஆசிரியர்பீட நிர்வாக அதிகாரி ஆர்.ஹெட்டியாராட்சி சிலுமினப் பத்திரிகையின் தற்போதைய பொறுப்பாசிரியர் பிஜிரபெல்பிட்ட, சட்டமா அதிபர் ஆகியோர் இம் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் வைத்திய சோதனைக்குட்படுத்தப் பணிப்பு

(கொழும்பு)

நாட்டின் சகல அரசாங்கப் பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் இந்திராணி காரியவசம் தெரிவித்துள்ளார். மாணவர்களின் போசாக்கு மட்டத்தை மதிப்பீடு செய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கிலும், தொற்று நோய்களில் இருந்து மாணவர் சமுதாயத்தைப் பாதுகாக்கும் வகையிலும் வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாட்டில் உள்ள 200 மாணவர்களுக்கு குறைவான பாடசாலைகளில் சகல மாணவர்களுக்கும் மற்றும் ஏனைய பாடசாலைகளில் ஒன்று, நான்கு, மற்றும் ஏழாம் தரங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சுகாதார அமைச்சினால் பாடசாலை வைத்திய பரிசோத னைகள் மேற்கொள்ளப் பட வுள்ளன.

பாடசாலை சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்படவுள்ள இந்த வைத் தியபரிசோதனைகளுக்குத் தேவை யான உபகரணங்களைத் தரமான உள்ளீட்டு நிதி ஒதுக்கீடுகளில் இருந்து கொள்வனவு செய்யுமாறும் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார்.

# வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களை மீண்டும் இணைக்க நிர்ப்பந்தம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிலிருந்து விலத்தப்பட்ட இரு பாராளுமன்ற உறுப்பினர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்ளுமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் - குமாரி கூரே விவகாரத்துடன் நேரடியாக தொடர்புபட்டதாகத் தெரிவிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையே இவ்வாறு இணைத்துக் கொள்ளுமாறு கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் தலைமைத்துவத்திற்கு அழுத்தம் கொடுத்துவருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன் மற்றும் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஜீப் ஏ மஜீத் ஆகியோரே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயின், மது பானம் விற்பனை; 77 நபர்கள் பொலிசாரால் கைது

## 33 பேர் தலைமறைவு

ஹெரோயின் மற்றும் சட்டவிரோத மதுபானம் என்பவற்றை விற்பனை செய்ததாக கருதப்படும் 77 நபர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.பாணந்துறை பொலிஸ் பிரிவின் இருபது இன்ஸ்பெக்டர்கள், 20 சார்ஜன்ட்டுகள், 56 கான்ஸ்டபிள்கள் கொண்ட விசேட அணியொன்று மேற்கொண்ட நடவடிக்கையின் போதே மேற்படி 77 நபர்களும் கைது செய்யப்பட்டனர்.இவர்கள் பாணந்துறை, ஹொரனவத்துவ,பண்டாரகம, மொரகாஹென,ஆகிய பொலிஸ் பிரிவுகளில் கைதானதாகவும். மேலும் 33 சந்தேக நபர்கள் தலைமறைவாகி இருப்பதாகவும் பாணந்துறை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

01 வது பிறந்தநாள் வாழ்த்து
இரணைப்பாலை புதுக்குடியிருப்பில் வசிக்கும்
யோகராசா றெஜிவிஜிலா தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
செரோன்
21 07 2004
தனது 1 ஆவது பிறந்த நாளை 21.07.04 அன்று தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா மார்,மாமிமார்,சித்தப்பாமார்,சித்திமார்,மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார்,அக்காமார் அனைவரும் குழந்தை யேசுவின் அருள்பெற்று பல்லாண்டு காலம் பதினாறு செல்வங்களும் பெற்று வாழ்க! வாழ்க! வென வாழ்த்துகின்றார்கள்.



05 ஆம் வட்டாரம்.
இரணைப்பாலை.
யோகராசா,
(அப்பா). (4831)

கோடைகால ஜில்சொப்பிங்
* முகூர்த்தப்பட்டுச் சாறிவகைகள்
* வெளிநாடுகளில் இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில்
* சாறிவகைகள் * சேட்,T.சேட் * சூட்வகைகள்
* ஜம்பர்வகைகள் * ரவுசர்த்துணிவகைகள் * கவுண்வகைகள்
* டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள் * கோட்சூட்
* ஸ்கேட் & பிளவுஸ் வகைகள் * பேபி கவுண் வகைகள்
போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள
தரமாகவும் மலிவாகவும்
மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்
T.P.:0214590174
இல.10,மின்சார நிலைய வீதி, பெரியகடை யாழ்ப்பாணம் (சி.9757)

ஓராண்டு நினைவஞ்சலி
தோற்றம் 1973 - 07 - 10
மறைவு 2003 - 08 - 01



அமரர் கந்தையா வடிவேல்
திகதி:- 2004-07-21
எமது அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நினைவாக மூங்கிலாறு இல:63இல் நடைபெறும் நினைவு நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
முகவரி: இல: 63, மூங்கிலாறு, உடையார்கட்டு. (4668)
தகவல்: மனைவி, பிள்ளைகள்.

மலிவு! மலிவு! மலிவு! மலிவு! மலிவு!
மிகவும் மலிவு! ☆ மிக்க மலிவு!!
ஆல் சிலோன் டிஸ்ரியூட்டர்ஸ்
ஸ்தாபனத்தாரின் மலிவு விற்பனை
யாழ். மக்களே!
வாருங்கள் வந்து பாருங்கள்
எமது நிறுவனத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 19-07-2004 முதல் 20.08.2004 வரை மலிவு விலையில் விற்பனை நடைபெறும்
சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு
இந்திய வெளியீடுகளுக்கு 20% கழிவு (3மடங்கு)
பிறநாட்டு வெளியீடுகளுக்கு 20% கழிவு
பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரி, கல்வியியற்கல்லூரி, பொது நிறுவனங்கள், நூலகங்கள் முதலானவற்றிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் வழங்கப்படும். அத்துடன், இலவச விநியோகமும் உண்டு.
பாடசாலைகளுக்கான தரமான உள்நாட்டுப்பொருள்கள், மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள் ஆகியனவற்றை ஒரே கூரையின் கீழ் பெற்றிட நாடுங்கள்.
ஆல் சிலோன் டிஸ்ரியூட்டர்ஸ்
212,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P 2225542
(சி-9759)

# பொதுத்துறை நிறுவனங்களின் மொத்த நஷ்டம் ரூ.10,944 கோடி

(புதுடில்லி)

மத்திய அரசிற்குச் சொந்தமான 36 பொதுத்துறை நிறுவனங்களில் தலைவர் பதவிகள் காலியாக உள்ளன. 107 பொதுத்துறை நிறுவனங்களில் நஷ்டம் ரூ10,944 கோடியாக உள்ளது.என மக்களவையில் திங்கட்கிழமை தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மாநிலங்களவையில் அரசதுறை நிறுவனங்கள் இணை அமைச்சர் சந்தோஷ் மோகன் தேவ் கூறியிருப்பதாவது ரயில் டெல் கார்ப்பிரேஷன், மகாநகர் டெலிபோன் நிகாம், இந்தியன், ஆயில் பிளன்டிங், பாரத், ஹெவி, எலக்ட்ரிக்கல்ஸ், கோல் இந்தியா, பெர்டிலைசர், கார்ப்பிரேஷன், ஆப்இந்தியா, ஐபிபீ, கம்பனி, பாரத் சஞ்சார் நிகாம், ஹெச் எம் டி மேஷின் டூல் ஸ் ச, நேஷனல், டெக்ஸ்ட்டைல், கார்ப்பிரேசன் போன்ற நிறுவனங்களில் தலைவர் மற்றும் இயக்குனர் பதவிகள் நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளது. யூன் முதலாம் திகதி முதல் வரும் 2005ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரை மேலும் 21 தலைவர்கள் பதவியும் 30இற்கும் மேற்பட்ட இயக்குனர்கள் பதவியும் காலியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனங்களில் 1990-1991 ஆகிய நிதியாண்டின் 22.19இலட்சம் தொழிலாளர்கள் வேலை பார்த்தனர். ஆனால் 2002-2003ஆம் நிதியாண்டில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 18.17 இலட்சமாகக் குறைந்து விட்டது. விருப்ப ஓய்வூதியத் திட்டம், பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கியது போன்ற காரணங்களால் தொழிலாளர்களின் எண்ணிக்கை இந்தளவிற்குக் குறைந்துள்ளது. மத்தியரசிற்கு சொந்தமான 227 நிறுவனங்களில் 107 நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. இந்த நிறுவனங்களின் மொத்த நஷ்டம் 2002ஆம்- 2003ஆம் நிதியாண்டில் ரூ.10,944 கோடியாக உள்ளது என்றார். அமைச்சர் சந்தோஷ்மோகன் தேவ்.

## பஞ்சாப் நதிநீர்ப் பங்கீடு குறித்து அரசின் நடவடிக்கை ஓரிரு நாட்களில் தெரியும்

–மத்திய அமைச்சர் எச். ஆர்பரத்வாஜ்

(புதுடில்லி)

நதிநிர்ப் பங்கீடு தொடர்பான அனைத்து ஒப்பந்தங்களையும் ரத்து செய்து பஞ்சாப் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து சட்டபூர்வமாக ஆராய்ந்து வருவதாக மாநிலங்களவையில் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது குறித்த அரசின் நடவடிக்கை ஓரிரு நாட்களில் தெரிவிக்கப்படும் என்று மாநிலங்களவையில் உறுதியளித்தார் மத்திய சட்ட அமைச்சர் எச்.ஆர். பரத்வாஜ்.

## போபால் விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்ட 5 இலட்சம் பேருக்கு ரூ.1503 கோடி

### 20 ஆண்டுக்குப் பின் நிவாரணம்

மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் 1984-ல் யூனியன் கார்பைடு தொழிற்சாலையில் இருந்து விஷ வாயு கசிந்ததில் பாதிக்கப்பட்ட சுமார் 5 இலட்சம் பேருக்கு ரூ.1503கோடி நிவாரணம் வழங்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1984-ல் போபாவில் இருக்கும் யூனியன் கார்பைடு தொழிற்சாலையில் ஷிஷ வாயுக் கசிவு ஏற்பட்டது. இதில் சுமார் 5 இலட்சம் பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. 1989-ல் உச்ச நீதிமன்றத்தின் முன்னிலையில் இந்திய அரசுக்கும் யூனியன் கார்பைடு நிறுவனத்துக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தப்படி யூனியன் கார்பைடு நிறுவனம் இந்திய அரசிடம் ரூ.2 ஆயிரத்து 162 கோடியை வழங்கியது. வழக்கு முடிந்து நிவாரணத்தொகை நிர்ணயிக்கப்படும்வரை இந்தத் தொகை இந்திய ரிசர்வ் வங்கியில் செலுத்தியது. இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை திங்கள் கிழமை அளித்தது. ரூ. 1503 கோடியை இவ்விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டும். பாதிப்பின் அளவைப் பொறுத்து அனைவருக்கும் நிவாரணத் தொகையை நிர்ணயிக்க வேண்டும். நிவாரணத் தொகையை வழங்கிய பின்னர் அது எவ்வாறு விநியோகிக்கப்பட்டது என்பது குறித்து உச்ச நீதிமன்றத்துக்கு அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்று நிதிமன்ற உத்தரவில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணை இரு மாதங்களுக்குப்பின் மீண்டும் நடைபெறும் என்றும் நீதிபதிகள் கூறினர்.


# கேள்வி அறிவித்தல்

## நிர்மாண வேலைகள்

ஐ.எவ்.பி.இல:- எம்யு/டி.பீடிஎச்எஸ்/பி.எஸ்.டி.ஜீ/எச்டபிள்யு/01

01. குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை அபிவிருத்தித் திட்டத்தின் நிதி மூலம் கீழ் குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகள் மாவட்ட செயலாளர், முல்லைத்தீவு, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து இதன் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிட்ட வேலைக்கு கோரப்படுகின்றது.

02. மீளளிக்கப்படாத கட்டணமாக கீழ்வரும் அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது மாற்றத்தக்கதான மாவட்ட செயலாளர் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் அல்லது அஞ்சல் அலுவலகத்தில் பெறப்பட்ட வங்கி ஆணையாக/ காசுக்கட்டளையாக மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்த பின்பு, முல்லைத்தீவு நிறைவேற்று எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்கள அவலகத்திலிருந்து 20.07.2004ஆம் திகதி 15.00 மணி வரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. ஆர்வமுள்ள M-07xICTAD பதிவுடைய கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை முல்லைத்தீவு நிறைவேற்று எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்கள அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு. மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

நிறைவேற்று எந்திரி அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
முல்லைத்தீவு,

04. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் மாவட்ட செயலாளர், முல்லைத்தீவு அவர்களின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணைக்கான வங்கியாணை/காசுக்கட்டளையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு, 20. 08. 2004, 15. மணிக்கு முன் கையளிக்கப்பட வேண்டும்.

தலைவர்.
கேள்விச்சபை,
மாவட்ட செயலகம்,
முல்லைத்தீவு.

05. அதேதினம் பி.ப 15 மணிக்கு கேள்வி திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதி விரும்பின்சமூகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் அலுவலகம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாட்களில் அதே இடத்தில், அதே நேரத்தில் கேள்விகள் பெறப்பட்டு திறக்கப்படும். ஏனைய விபரங்கள் கேள்வியாவணங்களில் பார்வையிடலாம்.

| குறியீட்டு இல | வேலை விபரம் | கேள்விப்பிணை ரூபா மீளளிக்கக் கூடியது | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா மீளளிக்கப்படாதது | வேலை நிறைவு செய்யவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| MU/DPDHS/PSDG/HW/01 | நிர்மாணம்:- மருத்துவ அதிகாரிகளுக்கான இரட்டை விடுதி, பொது வைத்திய சாலை, முல்லைத்தீவு. | 40000.00 | 1000.00 | 04 மாதங்கள் |

கேள்விதாரர்கள் கேள்விக்கான செயற்பிரமாண குறிப்புக்கள் 1 ஆவது பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளில் ஆகக்குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகிறது. இந்தக் கேள்விப் பத்திரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும் போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்ததார ருக்குத் தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

திருமதி. இமெல்டா சுகுமார்,
அரச அதிபர்/ மாவட்டசெயலாளர்,
முல்லைத்தீவு.

(சி.9152)



# புவி(கரன்) மணிக்கூட்டுத் திருத்தகம்

புவி மணிக்கூட்டுத் திருத்தகத்தில் மணிக்கூடுகளைத் திருத்தம் செய்வதற்குத் தந்தவர்கள், நான் கடையினைத் தற்சமயம் இடம் மாற்ற உள்ளதால் தங்களுடைய மணிக்கூடுகளை 20.07.2004 இல் இருந்து 20.08 2004 இற்குள் பெற்றுக்கொள்ளவும். பெற்றுக் கொள்ளாவிட்டால் நான் பொறுப்பாளி அல்ல.

தகவல்,
உரிமையாளர்.
புவி.

(4670)


# சாவு அறிவித்தல்



## செல்லையா ஆனந்தராசா


04 ஆம் வட்டாரம், முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னைநாள் கடற்றொழில் கூட்றவுச் சங்கத்தினதும், கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினதும் கணக்காளரும் ஆகிய செல்லையா ஆனந்தராசா 20.07.2004 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா,லோகாம்பாள் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும்; றோகினியின் அன்புக் கணவரும்; காலஞ்சென்ற பஞ்சாட்சரம், ஞானமணி ஆகியோரின் அன்பு மருமகனும்; உமையவன், யசோதை,ரிபிஷனா ஆகியோரின் அன்புத் தந்தையும்; கௌரிராணி, மோகனராணி, நித்தியானந்தராசா, துளசிராணி, கமலராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 21.07.2004 புதன்கிழமை (இன்று) முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடத்துக்காக நாவற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:-
மனைவி,பிள்ளைகள்.

(4669)

# ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டி

## சிறிலங்கா-பாகிஸ்தான் பலப்பரீட்சை





சிறிலங்காவில் நடைபெற்றுவரும் ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதல் கட்ட லீக் ஆட்டங்களில் பாகிஸ்தான், சிறிலங்கா அணிகள் தத்தமது பிரிவில் முதலிடம் பெற்றுள்ளன. ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற 'பி' பிரிவுக்கான கடைசி லீக் ஆட்டத்தில் சிறிலங்காவிடம் 13 ஓட்டங்களில் தோல்வியுற்றதால் இரண்டாவது இடத்தையே இந்தியா பிடிக்க முடிந்தது. இலங்கை மொத்தம் 11 புள்ளிகளையும், இந்தியா 7 புள்ளிகளையும் சேர்த்தன. இரண்டு ஆட்டங்களில் தோல்வியுற்றாலும் இரு முன்னாள் உலக சம்பியன்களை (இலங்கை, இந்தியா) மிரட்டிவிட்டு, தவழும் குழந்தையான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 'பி'பிரிவிலிருந்து வெளியேறியது. அதே போல 'ஏ'பிரிவிலிருந்து கத்துக்குட்டி ஹொங்கொங் புள்ளி ஏதும் பெறாமல் வெளியேறியது.

இப் பிரிவில் பாகிஸ்தான் (12 புள்ளிகள்), வங்கதேசம் (6 புள்ளிகள்) அணிகள் முறையே முதல் இரண்டு இடங்களைப் பிடித்து அடுத்த கட்டத்துக்கு முன்னேறியுள்ளன. இந்நிலையில் இந்த 4 அணிகளும் இன்று முதல் இரண்டாம் கட்ட லீக் ஆட்டங்களில் மோத உள்ளன. கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் வங்கதேசத்துடன் இந்தியா விளையாடுகிறது. அதேதினத்தில் கொழும்பு பிரேமதாசா மைதானத்தில் நடைபெறும் பகலிரவு ஆட்டத்தில் போட்டியை நடத்தும் இலங்கை யுடன், பாகிஸ்தான் பலப் பரீட்சை நடத்துகிறது. வரும் 25 ஆம் திகதி பாகிஸ்தானுடன் இந்தியா மோதவுள்ளது. தவிர, 27 ஆம் திகதி இலங்கையை மீண்டும் சந்திக்கிறது இந் தியா. இந்த லீக் ஆட்டங்களின் முடிவில் முதல் 2 இடங்களைப் பெறும் (புள்ளிகள் அடிப்படையில்) அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும். இறுதி ஆட்டம் ஓகஸ்ட் முதலாம் திகதி கொழும்பு பிரேமதாச மைதானத்தில் பகலிரவாக நடைபெறவுள்ளது.

# ஆசியக் கோப்பை கால்பந்து போட்டி தொடர்

## வலுவான சவூதியை சமன் செய்தது துர்க்மெனிஸ்தான்

ஆசியக் கோப்பை கால்பந்துப் போட்டியில், ஞாற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் 2-2 என்ற கோல் கணக்கில் வலுவான சவூதி-அரேபிய அணியை சமன் செய்தது துர்க்மெனிஸ்தான். இதற்கு முன்னர் 3 முறை சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது சவூதி அணி. இப்போட்டி சீனாவில் உள்ள செங்டு நகரில் நடைபெற்று வருகிறது. ஆட்டத்தின் நிறைவுக் கட்டத்தில் பிகெஞ்ச் முகமது குலியெவ் போட்ட கோலால் துர்க்மெனிஸ்தான் 2-2 என்ற கணக்கில் சவூதியை சமன் செய்தது.




சவூதி அணியில் யாசர் அல்கத்தானி 2 கோல்கள் போட்டார். "இந்த ஆட்டத்தில் வெற்றி பெறவில்லை என்றாலும் போட்டியில் இன்னும் எங்கள் அணி நீடிக்கிறது. இருந்த போதிலும் தமக்கு ஆட்டத்தின் முடிவு ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது" என்றார் அணியின் பயிற்றுநர் ஜெரார்ட்வேன்டிர் லெம். கடந்த மாதம் நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் 3-0 என்ற கோல்கள் கணக்கில் துர்க்மெனிஸ்தானை வென்றிருந்த சவூதி. அன்றைய ஆட்டத்தில் கடைப்பிடித்த அதே உத்தியை இந்த ஆட்டத்திலும் கடைபிடித்தது. இருந்தபோதிலும், ஆட்டம் துவங்கிய 6ஆவது நிமிடத்தில் நஸார் பேராமோவ் தன் தலையால் பந்தை மோதி கோல் போட்டார். இதன் மூலம் துர்க்மெனிஸ்தான் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. அடுத்த 3ஆவது நிமிடத்தில் சவூதி வீரர் அல் கத்தானி போட்ட கோலால் 1-1 என்ற சமநிலை ஏற்பட்டது. இந்நிலையில் சவூதி கோல்காப்பாளர் தாரிக் அல் ஹார்கனின் தவறான ஆட்டத்தினால் கிடைத்த பெனால்டிக் கிக் வாய்ப்பைப் பயன்படுத்த துர்க்மெனிஸ்தான் முயன்றது. ஆனால், துடிப்பான ஆட்டத்தால் அந்த பந்தைத் தாவித் தடுத்து கோல் கம்பத்திற்கு மேலே அனுப்பி விட்டார் தாரிக். அல்ஹார்கன் ஆட்டத்தின் 58ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பில் அல்கத்தானி கோல் போட்டார். இதனால் சவூதி 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. ஆட்டத்தின் நிறைவுக்கட்டத்தில் துர்க்மெனிஸ்தானின் பிகெஞ்ச் முகமது குலியேவ் போட்ட கோலால் ஆட்டம் சமன் நிலையில் முடிவு பெற்றது.

இதேவேளை, நேற்று நடைபெற்ற பரபரப்பான போட்டி ஒன்றில் ஜப்பான் அணி ஓமான் அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்துள்ளது.

போட்டியின் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல் போடாததால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. இதில் ஜப்பான் ஒரு கோலைப் போட்டு வெற்றி பெற்றது.

## சாஹீர்கான் காயமடைந்தார் இந்திய அணிக்குப் பின்னடைவு



இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான சாஹீர்கான் காயமடைந்துள்ளதால் இன்றைய பங்காதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் கலந்து கொள்ளமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஏற்பட்ட காயத்தில் இருந்து குணமடைந்த சாஹீர்கான் தற்போது சிறிலங்காவில் நடைபெற்றுவரும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் சேர்க்கப்பட்டார்.

இப்போட்டியில் சிறிலங்கா அணிக்கு எதிரான போட்டியில் சாஹீர்கான் மீண்டும் காயமடைந்தார்.

அவருக்குத் தொடையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும், இதற்கு சிறிலங்காவிலேயே சிகிச்சை மேற்கொள்ளப்படுமா? அல்லது நாடு திரும்புவாரா என்பது தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. இந்த நிலை இந்திய அணிக்குப் பெரும் பின்னடைவாகவே இருக்கும்.

## அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர் இந்திய அணி பங்குகொள்ளும் போட்டித் திகதி அறிவிப்பு

இந்தியா-அவுஸ்திரேலியாவுக்கு இடையிலான தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி அக்டோபர் 6 இல் பெங்களூரில் தொடங்குகிறது. இந்திய கிரிக்கெட் வாரியத் தலைவர் ஜக்மோகன் டால்மியா இதை நேற்று முன் தினம் அறிவித்தார். இரண்டாவது டெஸ்ட் போட்டி சென்னையில் அக்டோபர் 14-18 திகதிகளில் நடைபெறுகிறது. மூன்றாவது டெஸ்ட் நாக்பூரில் அக்டோபர் 26-30 திகதிகளிலும் நான்காவது டெஸ்ட் மும்பையில் நவம்பர் 3-7 திகதிகளிலும் நடைபெறுகிறது.



இந்திய சுழற்பந்து வீச்சாளர் கர்பஜன்சிங்கிற்கு பந்துவீச்சு பாணியை செய்து காட்டும் சாதனை வீரர் முரளிதரன்.


இவற்றைத் தவிர, தொடரின் ஆரம்பக் கட்டத்தில் செப்டம்பர் 30 இல் மூன்று நாள் போட்டி ஒன்றிலும் பங்கேற்கிறது அவுஸ்திரேலியா. தென் ஆப்பிரிகாவுடனான தொடரின் திகதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. கான்பூரில் நவம்பர் 20-24 திகதிகளில் முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெறுகிறது. இரண்டாவது டெஸ்ட் கல்கத்தாவில் நவம்பர் 28-டிசம்பர் 2 வரை நடைபெறுகிறது. இவற்றுக்கு முன்னதாக, நவம்பர் 14 இல் ஜெய்பூரில் மூன்று நாள் ஆட்டம் ஒன்றில் பங்கேற்கிறது தென்ஆபிரிக்கா.

## "கோபா" தென்அமெரிக்க கால்பந்து சம்பியன் போட்டி அரையிறுதியில் பலமான பிரேசில் - உருகுவே அணிகள்

தென்அமெரிக்க கால்பந்து (கோபா) போட்டியில் ஜாம்பவான்கள் பிரேசில், உருகுவே அணிகள் வெற்றி பெற்று அரையிறுதி மோதல் நிகழ்ந்துள்ளன. பியூராவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் 4-0 என மெக்ஸிகோவைத் தோற்கடித்தது பிரேசில் 'தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தினோம். ஆதலால் சிறந்த அணி நாங்கள் தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை' என பிரேசில் அணிப் பயிற்றுனர் கார்லஸ் அல்பெர்டோ கருத்துத் தெரிவித்தார். 2002 இல் உலகக் கோப்பையை வென்ற பிரேசில் இதுவரை 30முறை மெக்ஸிக்கோவுடன் விளையாடியுள்ளது. அதில் 19முறை வெற்றி கண்டுள்ளது. தலைநகர் லிமாவில் இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் உருகுவேயுடன் மோதுகிறது பிரேசில்.

மற்றொருகாலிறுதி ஆட்டத்தில் உருகுவே 3-1 என்ற என்ற கோல்கணக்கில் பராகுவேயைத் தோற்கடித்தது. உருகுவே 0-1 என பின்னடைவு பெற்றிருந்தும் தொடர்ந்து 3கோல்களை அடித்து வெற்றி பெற்றது.

## தொலைக்காட்சி தொழில்நுட்பத்தை சிறப்பான முறையில் கையாள வேண்டும்



### கிளாவ் வொயிட்

கிரிக்கெட் நிர்வாகத்தினர் தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தை சிறப்பான முறையில் பயன்படுத்திக் கொள்ள முன்வரவேண்டும் என மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் கிளாவ்வொயிட் தெரிவித்துள்ளார்.

நடுவர்கள் களத்தில் அளவுக்கு அதிகமான தவறுகளை இழைப்பதாகத் தெரிவிக்கும் லொயிட் துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்தாரா என்பதை தீர்மானிப்பதற்கு கிரிக்கெட் நிர்வாகத்தினர் புதிய யுத்திகளை கையாள வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

தொழில்நுட்பம் உதவுதாக இருந்தால் அது பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ஒலிம்பிக் பதக்கம் வெல்லும் முனைப்பில் இந்திய வீராங்கனை அபர்ணா பொப்பட்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் மகளிர் பாட்மிண்டன் பிரிவில் பதக்கம் வெல்லும் முனைப்புடன் தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமான அபர்ணா பொப்பட் இதற்காக, பெங்களூர் புறநகர் பகுதியில் உள்ள இந்திய விளையாட்டு ஆணையத்தின் தெற்கு மையத்தில் அவர் தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். கங்குலி பிரசாத் அவருக்குப் பயிற்சி அளித்து வருகிறார். தேசிய அளவில் மகளிர் பாட்மிண்டன் போட்டியில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார் பொப்பட் 7முறை தேசிய சீனியர் பாட்மிண்டன் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். அதற்கு முன்னதாக 4முறை தேசிய ஜூனியர் பாட்மிண்டன் பட்டத்தை வென்றிருக்கிறார். இந்தியாவில் மட்டுமல்லாது, சர்வதேச அளவிலும் மகளிர் பாட்மிண்டன் போட்டிகளில் பங்கேற்று இந்தியாவிற்குப் பல பெருமைகளைத் தேடித் தந்துள்ளார். உலக அளவில் சீனா, டென்மார்க், மலேசியா, இந்தோனேசியா, ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீராங்கனைகளே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இத்தகைய சூழலில் உலக மகளிர் பாட்மிண்டன் வீராங்கனைகள் தகுதிப் பட்டியலில் பொப்பட்16ஆம் இடத்தை எட்டிப் பிடித்துள்ளார்.

## பொன்.விநாயகமூர்த்தி ஞாபகார்த்த கால்பந்து இறுதிப் போட்டி இன்று

கிளிநொச்சி உதைபந்தாட்டச் சங்கத்தால் நடாத்தப்பட்ட பொன். விநாயகமூர்த்தி ஞாபகார்த்த கிளிநொச்சி மாவட்ட கழகங்களின் அணிகள் கலந்து கொண்ட கால்பந்துச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் உருத்திரபுரம் அணியை எதிர்த்து உழவர் ஒன்றிய அணி மோதுகின்றது.

மேற்படி போட்டி கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் மாலை3.30 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

## ஆர்வமுடையோர் கலந்து கொள்ளவும்

20 வயதுக்குட்பட்ட, 17 வயதுக்குட்பட்ட கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட அணிகளில் பங்கு பற்றியவர்களையும், பங்கு பற்றுவதில் ஆர்வமுடையவர்களையும் எதிர்வரும் 22 மாலை 5.00 மணிக்கு கிளிநொச்சி பொது மைதானத்தில் சந்திக்கும்படி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## முன்னணி கால்பந்து வீரர் ரொப்டா இங்கிலாந்தின் செல்சி கழகத்தில்


பிரான்சின் முதல் தர கால்பந்தாட்ட கழகங்களில் ஒன்றான மார்சே கழகத்துக்காக விளையாடி வரும் ஐவரிக்கோஸ்ட் நாட்டு வீரர் டி.வி.ஏ. ரொப்டா இங்கிலாந்தின் செல்சி கழகத்தில் இணைந்துள்ளார்.

இதற்காக அவர் 24.5 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட் பெறுமதியான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

26 வயதுடைய ரொப்டா செல்சி கழகத்துடன் 4 வருட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளார்.

சர்வதேச கால்பந்தாட்ட அரங்கில் முன்னணியில் திகழும் முன்வரிசை வீரர்களில் ஒருவராக ரொப்டா திகழ்கின்றார்.

## சிந்தனைக்கு



எதிரி ஈவிரக்கமற்றவன், போர்வெறி கொண்டவன்; எமது தாயகத்தைச் சிதைத்து எமது இனத்தை அழித்துவிடுவதையே இலட்சியமாகக் கொண்டவன். அவனது இதயக்கதவுகள் திறந்து எமக்கு நீதி கிடைக்குமென நாம் எதிர்பார்க்க முடியாது.

தமிழீழதேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21- 07-2004
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com

தொலைபேசி } 060-2213244
தொலைநகல் } 021-2283948

## சிறிலங்காவின் எதிர்பார்ப்பு!

இனப்பிரச்சினைத் தீர்விற்கு இந்தியாவின் ஒத்துழைப்புப் பெற வேண்டும். இந்தியாவின் ஆதரவின்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்ற குரல்கள் சிறிலங்கா ஆட்சியாளர்களால் அடிக்கடி ஒலிக்கப்படுவதுண்டு. இதற்காக மாறிமாறிவரும் ஆட்சியாளர்கள் அனைவரும் இந்தியாவிற்கு விஜயங்களை மேற்கொள்வதும் வழமையானதாகிவிட்டது. இதனை உறுதிசெய்யும் வகையிலேயே சிறிலங்காவின் புதிய பிரதமர் மகிந்தராஜபக்ஷவும் பரிவாரங்களுடன் டில்லிக்குச் சென்றுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்விற்கு இந்தியாவின் ஆதரவு, ஒத்துழைப்பு என்பன அவசியமானது என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றே. விடுதலைப்புலிகள் இயக்கம் கூட இதனை நிராகரிக்கவில்லை. இந்தியாவுடன் பகை உணர்வைக் கொண்டிருக்கவோ அன்றி இந்தியாவைப் புறம்தள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ புலிகளும் விருப்பம் கொண்டவர்களாக இல்லை.

இதேவேளை இந்தியாவும் தமது நிலைப்பாட்டைத் தெளிவாகவே தெரிவித்துள்ளது. இந்த வகையில் தற்பொழுது ஆட்சிக்கு வந்துள்ள காங்கிரஸ் கூட்டணி அரசாங்கமும் இனப்பிரச்சினை தொடர்பான தமது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை எனக் கூறியுள்ளதோடு தமது நிலைப்பாடு தொடர்பான கருத்துக்களையும் தெரிவித்துள்ளது. இதன் பிரகாரம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனக்கோரும் இந்தியா, நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

அத்தோடு இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வானது இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பவற்றிற்குள் உட்பட்டதாக இருத்தல் வேண்டும் என்ற எல்லைக்கோட்பாட்டையும் இந்தியா விதிப்பதாகவுள்ளது. அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவித்து அதற்கான வரையறைகளையும் தெரிவித்துள்ளது. இந்நிலையில் தற்பொழுது சிறிலங்கா அரசு இந்தியாவிடம் எதிர் பார்க்கும் ஒத்துழைப்பு, தலையீடு என்பன என்ன என்பதே கேள்வியாகும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் இந்தியாவின் ஒத்துழைப்பு என்ற ரீதியில் கோருவதானது இந்தியாவிடம் இருந்து நேரடி இராணுவ உதவிகளும் நேரடியான தலையீடுமே ஆகும். சமாதானத்திற்கான உதவிகளில் தன்னால் இயன்றவரை உதவுவதாக இந்தியா ஏற்கனவே கூறிவிட்டது. ஆனால் சிறிலங்கா அரசின் கோரிக்கைகளுக்கு இந்தியாவால் ஆதரவான பதில் ஒன்று அளிப்பது கடினமாகவே உள்ளது. அதாவது அதற்கான அரசியற்சூழ்நிலை தற்பொழுது இல்லை என்பதே யதார்த்த நிலையாகும்.

இந்தியா, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையீடு செய்தல் என்பதற்கு இன்று பல இடையூறுகள் உள்ளன. இவற்றில் முதன்மையானது விடுதலைப்புலிகள் மீது இந்திய அரசு விதித்துள்ள தடையாகும். இத்தடை நீக்கப்படும் வரையில் இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒரு மத்தியஸ்துவராகவோ, நடுநிலமையாளராகவோ சேவையாற்றுவது கடினம் மிக்கதொன்றாகவே இருக்கும். இது இந்தியாவிற்கு நன்கே விளங்கும்.

அடுத்ததாக சிறிலங்கா எதிர்பார்ப்பது இந்தியாவின் நேரடியான தலையீட்டையாகும். குறிப்பாக இராணுவ ரீதியிலான தலையீடாகும். அதாவது விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவ ரீதியில் நேரடி ஒத்துழைப்பை வழங்குதல் அன்றி தனது இராணுவத்தைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல் என்பதாகும்.

ஆனால் இந்தியா அத்தகையதொரு நிலைப்பாட்டை எடுக்கும் சூழ்நிலை தற்பொழுது இல்லை என்றே கொள்ளப்படுகின்றது. முதலில் இலங்கை இனப்பிரச்சினைகளில் கடந்தகாலம் விட்ட தவறுகளை மீண்டும் ஒருதடவை விடுவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. கடந்தகால கசப்பான அனுபவங்கள் இதற்குக் காரணமாகும். அடுத்ததாக தற்போதைய அரசியற் சூழ்நிலையும் இந்தியா குழப்பகரமான நடவடிக்கைகளைமேற்கொள்ளும் என எதிர்பார்ப்பதற்கில்லை. அதாவது நோர்வே ஏற்பாட்டாளராகச் செயற்படுவதற்குச் சர்வதேச ரீதியில் பெரும் ஆதரவுண்டு. இந்நிலையில் இந்தியா அதற்கு மாறானதொரு நிலைப்பாட்டை வெளிப்படையாக மேற்கொள்ளத் தயாராக இருப்பதற்கு வாய்ப்பில்லை.

இந்தியாவைப் பொறுத்து அது சிறிலங்காவிற்குப் பொருளாதார ரீதியிலும் மற்றும் இராணுவரீதியில் நேரடித்தலையீடற்ற ரீதியிலும் உதவுவதற்குத் தயாராகவே உள்ளது. அத்தகைய உதவிகளைச் சீராக வழங்கியும் வருகின்றது. இதற்கு அப்பால் இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையீடு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளும் வகையிலேயே செயற்பட்டுவருகின்றது.

சுருக்கமாகக் கூறுவதானால் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப இந்தியா தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தவண்ணமே உள்ளது. ஆனால் சிங்கள ஆட்சியாளர்களோ இந்தியாவின் தல்லயீடு நேரடியானதாக வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இது அவர்கள் சமாதானத்தின் மீதுகொண்டுள்ள ஆர்வத்தினால் அல்ல. தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு எதிரான தமது நிலைப்பாட்டிற்கு அதாவது இராணுவத்திற்கு ஆதரவு தேடுவதும் தமது பிரச்சினைகளை இந்தியாவின் தலையில் கட்டிவிடுவதற்குமே ஆகும்.

### -யாழ். இல் படையினரால் கைதாகி-

# காணாமற் போனோர் குறித்த விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு

தென்மராட்சி தெற்கின் கைதடி நாவற்குழிப் பகுதிகளில் 1996 மற்றும் 97ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போன தமிழ் இளைஞர் யுவதிகள் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றில் இவ் ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், அடுத்த மாதம் 19ஆம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆட்கொணர்வு மனு மீதான விசாரணகளை நடாத்தி வந்த சாவகச்சேரி நீதிவான் பா. சுப்பிரமணியம் விடுமுறையில் சென்றுள்ள நிலையில், பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையின்போதே விசாரணைகளை மற்றோர் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, மேற்படி ஆட்கொணர்வு மனுவில் முதலாம் எதிரியாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த படை அதிகாரியான சமிந்த ஹெப்பற்றிக்கொலாவ இதுவரை நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை.

குறித்த காலப் பகுதியில் கைதடி - நாவற்குழி கிராமத்தைச் சுற்றிவளைத்து இளைஞர் - யுவதிகளைக் கைது செய்து அழைத்துச் சென்றதாகக் கூறப்படும் குறித்த படை அதிகாரி தற்போது பலாலி படைத் தளத்தில் கடமையாற்றி வருகின்றார்.

எனினும், ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகளுக்காக சாவகச்சேரி நீதிமன்றில் இப்படை அதிகாரியை ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. ஆயினும், அவர் நீதிமன்றில் ஆஜராகாது இருந்து வந்ததையடுத்து குறித்த படை அதிகாரிக்கு நேற்று நீதிமன்றில் ஆஜராக இறுதி சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் நேற்றும் குறித்த படை அதிகாரி நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை. (27)

# புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

புதிதாக ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் முன்னிலையில் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்துள்ளனர்.

இதன்போது ஐக்கிப மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூன்று பேரும், ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூன்று பேருமே சபாநாயகர் டபிள்யூ ஜே. எம்.லொக்கு பண்டார முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தவர்களாவர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மொகமட் முஷமிர், ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகிய பிலிப் குமாரசிறிலியன கேயிக்குப் பதிலாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக நிர்மல் கொத்தலாவலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். முன்னாள் தகவல் ஊடக அமைச்சா றெஜினோல்ட் கூரே விலகியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டார்.

முன்னாள் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் சேபால ஹேசத் விலகியதை அடுத்து கேகாலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் எச்.ஆர். விக்கிரமபாலா பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கருணாவை கொழும்பிற்கு கூட்டிவந்தார் என்ற குற்றச்சாட்டை அடுத்து பதவிவிலகிய அலிசாகிர் மௌலானாவின் இடத்திற்கு முகைதீன் முஸ்தபா பதவிப் பிரமாணம் செய்துள்ளார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஐக்கிய தேசிய முன்னணி தேசியப் பட்டியல் உறுப்பினராக பசீர் சேகுதிவ பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். ஐக்கிய தேசிய முன்னணி தேசியப்பட்டியல் உறுப்பினராக எஸ்.நிஜாமுதீன் பதவிப்பிரமாணம் செய்துள்ளார்

# முன்னாள் பா.உ.ரின் வீட்டில் பணம், ஆவணங்கள் கொள்ளை

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டில் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

முன்னாள் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான எச்.ஆர்.பிரியசிறி என்பவரின் வீட்டினுள் சென்ற வியாழன் நள்ளிரவில் புகுந்த ஐவர் கொண்ட குழுவொன்று காவலாளியை அடித்துப் போட்டுவிட்டு இருபதாயிரம் ரூபா பணத்தையும் முக்கிய ஆவணங்கள் பலவற்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து திக்வெல்ல பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நவீன சுடுகலன்கள் பாவிக்க சிறைக்காவலருக்குப் பயிற்சி

சிறைச்சாலைகளின் பாதுகாப்பை அதிகரிக்க சிறிலங்காவின் நீதியமைச்சு திட்டமிட்டுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன்படி இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் சுடுகலன்கள் பாவிப்பதில் சிறைக்காவலர் களுக்கும் பயிற்சியளிக்குமாறு நீதி யமைச்சர் செனவிரத்னா உத்தரவிட்டுள்ளதாக ஆங்கில நாளிதழ்ச் செய்தி தெரிவிக்கின்றது.

### தென்கிழக்குப் பல்கலைக்கழக

# பாதுகாப்பு அதிகாரி கொலை தொடர்பான சந்தேக நபர் நீதிமன்றில் சரண்

தென்கிழக்குப் பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியாகவிருந்த எம்.சி.எம். இல்முதீனின் கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த கொலைச் சந்தேக நபர் முஸ்தபா அபூபக்கர் (23) நிந்தாவூரைச் சேர்ந்த எச்.ஏ. அப்துல் ஹக்கீம் சட்டத்தரணி மூலம் நேற்று காலை 8.00 மணியளவில அக்கரைப்பற்று பொலிஸில் சரணடைந்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.எம்.ஐ. எம்.புகாரி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த இல்முதீன் கடந்த மாதம் 16ம் திகதி பகல் தனது வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் போது கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. கொலை நடந்த அன்றிலிருந்து நேற்று முன்தினம் வரை கொலை செய்யப்பட்டவரினது உறவினர்களும், அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.எம். சதாத் தலைமையிலான குழுவினரும் பல தடவை சந்தேக நபரை பிடிப்பதற்கு முயற்சித்தும் பயனளிக்காத நிலையில் சட்டத்தரணி மூலம் சரணடைந்துள்ளார். சந்தேக நபர் தனது 5வயது பிள்ளையை மல்வான அனாதை இல்லத்தில் சேர்த்துள்ளார். இவர் ஊர்காவல் படை வீரராக இருந்து பல குற்றச் செயல்கள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டதுடன் தனது மனைவியுடன் சண்டை செய்து அவ்வேளை தனக்கு தீமூட்டி தற்கொலை செய்ய முயற்சித்து காப்பாற்றப்பட்டவராவார். 4 வருடங்களுக்கு முன் ஊர்காவல் படைவீரர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட வரென்பதும் குறிப்பிடத்தக்கது. அக்கரைப்பற்று பொலிசாரால் நேற்று அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது நீதவான் ரி.எல்.ஏ. மனாப் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# கொடுப்பனவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பாரதிபுரம், பொன்னகர், மலையாளபுரம் கிறிஸ்ணபுரம், விவேகானந்தநகர், போன்ற கிராமங்களுக்கான மாதாந்த பொதுசன உதவிக்கொடுப்பனவு 26 ஆம் திகதி பாரதிபுரம் பொது நோக்கு மண்டபத்தில் வைத்து கிளிநொச்சி தபாற்கந்தோர் அலுவலகர்களால் வழங்கப்பட உள்ளது. எனவே மேறபடி பணத்தினை பெறும் கிராமத்தவர்கள் தவறாது சென்று இப் பணத்தை பெற்றுக் கொள்ளும்படி கரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன் கேட்டுக் கொண்டுள்ளார். (கு)

## 600 பேருக்கு சிகிச்சை

வெளிநாட்டிலிருந்து வருகை வைத்திய நிபுணர்களும், மருத்துவப் போராளிகளும் இணைந்து 17,18 ஆம் திகதிகளில் திருகோணமலை ஈச்சிலம்பற்று கிராமத்தில் 400 க்கும் மேற்பட்டோருக்கும், 19 ஆம் திகதி மட்டக்களப்பு கதிரவெளி கிராமத்திலும் 200 க்கும் மேற் பட்டோருக்கும் பல் மருத்துவம், பொது மருத்துவம், உட்பட சிகிச்சையளிக்கப்பட்டது. அத்துடன் கதிரவெளி, ஈச்சிலப்பற்று பாடசாலை மாணவர்களிற்கு பற் சுகாதார வகுப்புக்கள் எடுக்கப்பட்டதுடன் பற்தூரிகைகளும் வழங்கப்பட்டது.

# கிழக்கில் துணை இராணுவப் படையினர் ஊடகவியலாளரை அச்சுறுத்துகின்றனர்

## மட்டு. பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்த மூர்த்தி

"யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி இராணுவத்துடன் செயற்பட்டவரும் துணை இராணுவப் படையினரை சிறிலங்கா அரசாங்கம் நிராயுதபாணிகள் ஆக்கரமையினாலேயே ஊடகவியலாளர் நடேசன் கொலை செய்யப்பட்டார்.

மட்டக்களப்பில் இத்துணை இராணுவப்படை நடேசனைக் கொன்றதுடன் ஏனைய சுதந்திர ஊடகவியலாளர்களுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

இராணுவத்தினரின் அனுமதியின்றி இக்குழு ஆயுதங்களுடன் மட்டக்களப்பில் நடமாடவோ ஊடகவியலாளர்களைப் பயமுறுத்தி கொலை செய்யவோ முடியாது"

இவ்வாறு பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றிய தமிழ்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சே.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்.

"பயங்கரவாத தடைச்சட்டமானது பூரணமாக அகற்றப்பட வேண்டும் ஏனெனில் இது ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைத் தண்டிப்பதோடு மட்டுமல்லாமல் அப்பாவித் தமிழ் ஊடகவியலாளர்களை நியாயமற்ற முறையில் சிறைக்கு அனுப்பியது.

ஊடகவியலாளராக இருந்தநான் கிழக்கில் நிருபராகப் பணியாற்றிய போது பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்தேன்.

வடக்கு கிழக்கின் உண்மை நிலையை எடுத்துக் கூறிய தமிழ் ஊடகவியலாளர்கள் சிங்கள இனவாத ஊடகங்களினால் புலிகள் என முத்திரை குத்தப்பட்டனர்.

இன்று மட்டக்களப்பு ஊடகவியலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு இடமாக உள்ளது. என்னுடன் கூடப்பணியாற்றிய ஊடக நண்பர்கள் மட்டுநகரை விட்டு வெளியேறி மறைந்து வாழ்கின்றனர். அதற்குக் காரணம் துணை இராணுவப்படையினால் தொடர்ச்சியாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையே ஆகும்.

ஒவ்வொருவரும் சமாதானம் நிலையானதாகத் வேண்டும் என விரும்புகின்றன ஆனால் சிங்கள இனவாத ஊடகங்கள் சமாதானத்திற்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றன. அவைகள் மக்களைக் குழப்புகின்றன. "என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உரையாற்றுகையில்

"ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனைக் கொலை செய்த கும்பலின் தலைவரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இலாக்கா பொறுப்புள்ள அமைச்சராக்கியுள்ளது. ஈ.பி.டி.பி. தலைவராயுள்ள அந்நபரான டக்ளஸ் தேவானந்தா இப்பொழுது மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றி துரோகி கருணாவிற்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருக்கின்றார்" என்று குறிப்பிட்டடார்,

# பொன்னம்பலம் மருத்துவமனையில் இலவச சத்திரசிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

இன்று தொடக்கம் வரும் 26ஆம் திகதி வரை புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையில் இலவச சத்திர சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் பொது சத்திர சிகிச்சை நிபுணர்களினால் கேணியா, மூவறோய், கட்டிகள் போன்ற பிரச்சினைகள் உட்பட குடல் சம்பந்தப்பட்ட நோக்கான சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் பயன்பெற விரும்புவோர் வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

மேற்படி நாட்களில் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை தொடர்பு கொண்டு நோய்க்கான ஆலோசனை களையும்,சிகிச்சையும் பெற்றுக்கொள்ளலாம். (தீ)

## பொது மருத்துவம்

(புதுக்குடிருப்பு)

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் வைத்திய கலாநிதி பத்மலோஜினி அவர்களினால் ஒவ்வொரு புதன் கிழமை தோறும் நோயாளர்கள் பார்வையிடப்பட்டு மருத்துவ ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்கவுள்ளார். பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையில் வெளிநோயாளர் பகுதியில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

# மன்னாரில் வரும் வெள்ளிக்கிழமை மூன்று முக்கிய கருத்தரங்குகள்

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டிலும், யு.என்.எச். இன் அனுசரணையுடனும் மூன்று முக்கிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முதலாவது மன்னார் அல்அசார் மத்திய மகாவித்தியாலயத்தில் தேசிய அடையாள அட்டை விநியோகம் சம்பந்தமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள க. பொ.த. சா/த, க.பொ.த. உ/த வகுப்புகள் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும், சலக கிராம சேவகர்களுக்கும் ஒரு கலந்துரையாடல் நடைபெறும். இந்தக் கூட்டத்திற்கு கொழும்பு தேசிய அடையாள அட்டை அலுவலகத்தைச் சேர்ந்த பிரதிப் பணிப்பாளர் ஜனாப் எம்.ஏ. கலாம், அரசாங்க அதிபர் உட்பட பலர் கலந்து கொள்வார்கள்.

இதேசமயம், இரண்டாவது நிகழ்வாக மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல இறப்பு, பிறப்பு பதிவு அதிகாரிகளுக்கும் ஒரு கலந்துரையாடல் நடைபெறும். இந்த விளக்கக் கருத்தரங்கிலே கொழும்புப் பதிவாளர் நாயகம் கலந்து கொள்ளவுள்ளார். மூன்றாவது நிகழ்வாக மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு மன்னார் வை. எம்.சி.ஓ. மண்டபத்தில் ஒரு கருத்தரங்கு இடம்பெறும். இந்தக் கருத்தரங்கில் கொழும்பு மனித உரிமை ஆணைக குழுவின் தலைமை அலுவலக இணைப்பாளர் சேனநாயக்க கலந்து கொள்வார்.

இதற்கான சகல பூர்வாங்க வேலைகளையும் மன்னார் மாவட்ட மனித உரிமை திட்ட அதிகாரி கலாம் எம். றஜீத் மேற்கொண்டு வருகின்றார்.

---

### ஐ.நா....

சுமார் ஒருமணித்தியாலமாக நடைபெற்ற இக்கலந்துரையாடலில் சர்வதேசத்தினதும், தமிழினத்தினதும்தமிழீழத்தினதும் மனித உரிமைகள் பற்றியே இச்சந்திப்பில் கலந்துரை யாடிய தாக பா. நடேசன் அவர்கள் தெரிவித்தார். (கு)

### கிளியில்...

எஸ் ரட்ணநாயக்கா வடகிழக்கு சுகாதார அபிவிருத்தித்திட்ட நிபுணத்துவ ஆலோசகர் டாக்டர் வி ஜெகநாதன், யுனிசெவ் துணைப் பிரதிநிதி டாக்டர் யஸ்மீன்கக், கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் என்.அருண், சுகாதார பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், போசாக்கு வழிகாட்டற் குழுத்தலைவர், வடகிழக்கு மாகாண தாய் சேய் சுகாதாரத்தை மேம்படுத்தல் இணைப்பாளர் ஆகிய பதவிகளை வகிக்கும் டாக்டர் வை.ட.நிகால் ஜெயதிலக ஆகியோர் நிகழ்த்தினார்.

பிரதம விருந்தினர் உரையை ஜப்பானிய தூதரக பொருளாதாரப் பிரிவு முதன்மைச் செயலாளர் டாக்டர் யுஜி மியாகாரா நிகழ்த்தினார். கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளி மாவட்ட வைத்தியசாலை வைத்தியரும், வைத்திய கலாநிதியுமான யூடிறமேஸ் ஜெயக்குமார் நன்றியுரை நிகழ்த்தினார். அத்துடன் நிகழ்வுகள் யாவும் நிறைவு பெற்றன.

இந்நிகழ்வில் வைத்தியர்கள், சுகாதார துறைசார்ந்தவர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (லோ,தீ)

---

# இந்திய-சிறிலங்காவிற்கிடையில் சுதந்திரவர்த்தக வலயம் குறித்து ஆராய இந்தியக்குழு வருகிறது

இந்தியாவிற்கும் சிறிலங்காவிற்கும் இடையிலான சுதந்திர வணிக ஒப்பந்தம் குறித்து ஆராய்வதற்கு இந்தியாவின் உயர்மட்டக் குழுவொன்று அடுத்தமாதம் சிறிலங்காவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதியிலிருந்து 18ஆம் திகதி வரைஇந்தியாவின் உயர்மட்டக்குழு கொழும்பிற்கான இவ்விஜயத்தை மேற்கொள்ளும் என அரச வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன. இருநாட்டிற்கும் இடையிலான சுதந்திர வணிக ஒப்பந்தத்தை விரிவுபடுத்துவது குறித்து இந்த விஜயத்தின்போது முக்கிய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும் என செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த விஜயத்தின்போது இருநாட்டிற்கும் இடையிலான பொருளாதார மற்றும் சமுதாய உறவு குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படும் என இந்தியாவிற்கான சிறிலங்காவின் தூதுவர் மகிந்த முனசிங்க தெரிவித்துள்ளார்.

# விடுதலைப்புலிகள் பத்திரிகை இன்று வெளிவருகின்றது!

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப்புலிகள் பத்திரிகை இன்று வெளிவருகின்றது.

"கேள்விக்குறியாக உள்ளது சமாதானத்தின் எதிர்காலம்" என்ற முகப்புச் செய்தியுடன் வெளிவரும் இந்த ஏடு "விடுதலைப்புலிகளின் ஆணி-ஆடி மாதத்திற்குரிய 117 ஆவது இதழாகும்" ஆபத்தான ஆலோசனை என்ற ஆசிரியர் தலையங்கத்துடன் வெளிவரும் இவ் ஏட்டில் "அரசியல் வணிகத்தின் காட்சியறைக் கோலங்கள் " என்ற தலைப்பில் கா.வே பாலகுமாரன் எழுதிய அரசியல் கட்டுரையும் "காலம் அணைக்கக் காத்திருக்கும் கொங்கோ மக்கள்" என்ற தலைப்பில் அருள்ளன் எழுதிய கட்டுரையும் "படித்த பாடத்தை மீண்டும் படிக்கும் முயற்சி" என்ற தலைப்பிலான எல்லாளனின் கட்டுரையும் இவற்றோடு கரும்புலி மேஜர் தனுசனின் நினைவான "தேசத்தின் புயல்" என்ற விழுதுகளும் "பிளவுபட்ட இலங்கை ஓட்ட வல்லவர்யார்" "தற்கொடைத் தாக்குதல்களும் கரும்புலிகளும்" ஆசிய தலைப்புக்களுடனான கட்டுரைகளோடு அன்புச்சோலை மூதாளர் பேணலகம் பற்றிய "எங்கள் பிள்ளைகள் தேசத்தை காத்தார்கள் தேசம் இப்ப எங்களைக்காக்கிறது'' என்ற கட்டுரையும் "கனவாகி வருகிறது யுத்தத்திற்கு திரும்பவியலாத கட்டம்'' என்ற கட்டுரையும், "பூக்களுள் எழுந்த புயல்" என்ற தலைப்பிலும் நிதியுதவிகள் ஏய்க்கும் ஸ்ரீலங்கா ஏமாறும் சர்வதேச சமூகம் என்ற தலைப்பிலான கட்டுரைகளோடு வியாசனின் "ஆடிக்காற்றுக்கு அணையாத விளக்கு சித்திரைக்காற்றுக்கா ஜீவனிழக்கும்'' என்ற தலைப்பிலான கவிதையையும் "மாமனதை யாரறிவார்" என்ற செந்தோழனின் கவிதையையும் தாங்கியவாறு இவ்விதழ் வெளிவருகிறது. (லோ.ச)

# லலித் கொத்தலாவல தொடர்பாக இணையத்தில் வெளியிடப்பட்ட செய்தியை நீக்கவுத்தரவு

(கொழும்பு)

செலின்கோ கூட்டு நிறுவனத்தின் தலைவர் லலித் கொத்தலாவல மீது இணையத்தளம் ஒன்றில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நீக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

கடந்த மார்ச் முதலாம் திகதி சிங்கள நெற் எனப்படும் இணையத்தளத்தில்.செலின்கோ தலைவரின் மீது இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட செய்தி வெளியாகியிருந்தது. பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சிஹல உறுமயவின் பிரதான பௌத்த பிக்குகளை கொலை செய்ய கொத்தலாவல முயற்சிக்கிறார் என்ற செய்தியே அதுவாகும். பாணந்துறையில் நடைபெற்ற சிஹல உறுமய வின் பொதுக்கூட் டம் ஒன்றை ஒலி ஒளி பதிவு செய் தமை இதன் அடிப்படையிலேயேஇடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து இதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணை செய்த கொழும்பு மேல் நீதிமன்றம் குறிப்பிட்ட செய்தியை எதிர்வரும் 14 நாட்களுக்குள் இணையத்தளத்தில் இருந்து நீக்கிவிட வேண்டும் அல்லது நட்டஈட்டை செலுத்த வேண்டியேற்படும் எனவும் மேல் நீதிமன்றம் எச்சரித்துள்ளது. (32)

---

### போரின்

களை எடுததுக கூறினாா.

கஜேந்திரனின் விளைவுகள் குறித்த எச்சரிக்கை ஆளும் கட்சிகளையும், ஜாதிக ஹெல உறுமய போன்ற அடிப்படைத் தீவிரவாதக் கட்சிகளுககுப் பெரும் சீற்றத்தைக் கொடுத்தது.

இதனைத் தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்களும், ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களும் அவர் மீது பெரும் சீற்றம் கொண்டதோடு கஜேந்திரன் பா.உ. மிரட்டும் வகையில் நடந்து கொண்டுள்ளனர்.






இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.